உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்

திங்கள் வெளியீடு

துணர் ௰௫ { பிரமாதி, மாசி } மலர் ௰௧


க. காரைக்காலம்மையாரின் கணவன் நிலை 415
திரு. சி. அருணை வடிவேலுமுதலியார் அவர்கள்

உ. வினையுணர்வும் ஞானசம்பந்தரும் 424
திரு. ஔவை. சு. துரைசாமிபிள்ளை அவர்கள்

௩. வள்ளல் கண்டீரக்கோப் பெருநள்ளி (நாடகம்) 430
திரு. சிவ. குப்புசாமி அவர்கள்

௪. தமிழ்நாட்டின் திருமடங்களும், திருஞானியார் திருமடமும் 436
திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்

௫. திருமுருகாற்றுப்படை 441
திரு. M. நடேசமுதலியார் அவர்கள்

௬. தமிழ்ச்செய்திகள் 446

௭. புத்தக மதிப்புரை 452
பொழிற்றொண்டர்



பொழிற்றொண்டர்:

செந்தமிழ்ப்புரவலர், தமிழவேள்,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை.

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்

௳

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| | | |
|---|---|---|
| துணர் ௰௫ | பிரமாதி, மாசி | மலர் ௰௧ |


௳

## காரைக்காலம்மையாரின் கணவன் நிலை

வித்துவான். காஞ்சி. திரு. சி. அருணை வடிவேல் முதலியார் அவர்கள்

தமிழ்ப்பொழில் ஐப்பசித் திங்கள் மலரில் "பழமளித்த பாவையார்" என்னுந் தலைப்பின்கீழ் வெளிவந்துள்ள ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையானது பல அறிஞர்களது அறிவைத் தூண்டியிருக்கும். அத்தூண்டுதலின் பயனாக அக்கட்டுரையோடு ஒத்தும்ஒவ்வாதும் பலவகையான முடிபுகளும் அவரவர் உள்ளத்தில் தோன்றியிருக்கலாம். அக்கட்டுரையின் முடிபு, 'காரைக்காலம்மையாரின் கணவனாகிய பரமதத்தன் நன்மக்கட்குரிய நல்லியல்புகள் வாய்க்கப் பெறாததோடு தன்னலமே பேணல், பொய்கூறல் முதலிய இழிதகைமைகள் உடையன்' என்பதும், அதனால் நற்பண்புகளுக்கு உறைவிடமாகிய அம்மையாரும் அவனும் ஒன்றிவாழ்ந்திலர்' என்பதுமேயாம். இதற்கு அதன்கண் பல ஆதாரவுகள் காட்டப்பட்டுள்ளன. இங்ஙனம் ஒரு பொருளைப் பற்றி ஒருவர்க்கு ஒருவகையான முடிபும், பலர்க்குப் பலவகையான முடிபுகளும் தோன்றுதல் இயல்பே. அவையனைத்தையும் ஒப்பு நோக்கி உண்மை காண்டல் அறிஞர் கடனாகும்.

அக்கட்டுரையிற் கூறியவாறே சொற்பொழிவாளரிற் சிலரும் கூறுவதுண்டு. ஆயினும், அதுபற்றிச் சற்று ஆழ்ந்து நோக்கிமுடிபு செய்தல் நன்று. பரமதத்தன் இயல்பையறியக்

காரைக்காலம்மையார் திருமொழியில்ஏதும் சான்றில்லை. ஆகவே, அதனைஅறிதற்குச் சேக்கிழார் பெருமான் அவனை எவ்வாறு கருதினார் என்று நோக்குவதும், வரலாற்று நிகழ்ச்சிகளை ஆழ்ந்துபார்ப்பதுமே செய்யத்தக்கன. அவற்றுள், சேக்கிழார் பெருமான் கருத்தை அவர் பரமதத்தனைக்குறிக்கும் சொற்களைக் கொண்டு துணிதல்வேண்டும். வரலாற்றின்கட் காணப்படும் உறுப்பினர்களது இயல்பை அவரவர்களைக் குறிக்குமிடங்களில் தக்க அடை மொழிகளாற் புலப்படுத்துதல் கவிகளுக்கியல்பு. அவ்வியல்பு சேக்கிழாரிடத்தில் தக்கவாற்றான் அமைந்து விளங்கும். அதனை நோக்குவாம்:

நன் மக்கள் கடைப்பிடித்தற்குரிய நெறிஇரண்டு. அவை: உலகநெறி சிவநெறி என்பன. உலகநெறியாவது அறத்தையே பொருளாகக் கொண்டு நல்லொழுக்கத்தில் நிற்றல். சிவநெறி யாவது இறைவனையே பொருளாகக் கொண்டு குருலிங்க சங்கம வழிபாடு செய்தல். இவ்விரண்டனுள் சிறந்தது சிவநெறியே. பெரியபுராணத்திற் கூறப்படும் நாயன்மார்களனைவரும் இத் தகைய சிவநெறியில் நின்றவர்களே. அஃதாவது இருவகை நெறியையும் கடைப்பிடித்தொழுகுங்கால் இரண்டையும் ஒருங்கு பற்றுதல் கூடாதவாறு நேர்ந்தவிடத்து உலகநெறியை விட்டுச் சிவநெறியையே பற்றுவர் என்பது.

இத்தகைய நாயன்மார்களில் இல்லறத்தில் நின்றவர்கள் மனைவி முதலானவர்களோடு கூடியிருத்தல் இயல்பாகலின், அம் மனைவியர் முதலியோர்களும் நாயன்மார்கள் அடைந்துள்ள முதிர்ந்தநிலையை அடைந்திருத்தல்இயலாது. ஆகவே, அவர்களிற் சிலர் நாயன்மார்களோடொப்பச் சிவநெறியில்நிற்றலும், சிலர் உலகநெறியில் நிற்றலும், சிலர் உலகநெறிபற்றிச் சிவநெறிக்குத் தடைசெய்தலும், சிலர் சிவநெறிக்குத் தடைசெய்யாது உலக நெறியிலும் ஒரு சிறப்புத்தோன்றாது பொதுப்பட ஒழுகலும் முதலிய பல திறச்செயல்களை உடையராயிருத்தல் இயல்பு. அத்தகையோர்களை யெல்லாம் ஆசிரியர் சேக்கிழார் குறிக்கு மிடங்களில், நாயன்மாரோடொப்பச் சிவநெறி நின்றோர்களை மிகவும் சிறப்பித்தும், உலகநெறியில் நின்றோர்களை ஒருவாறு சிறப்பித்தும், உலகநெறி பற்றிச் சிவநெறிக்குத் தடை செய்தவர்களை இழித்தும், ஏனையோர்களைப் பொதுவகையாவுகம் கூறுவர். இவற்றுள், சிவநெறி நின்றாரைச் சிறப்பித்ததற்கு எடுத்துக்காட்டாகத் திருநீலகண்ட நாயனாரது மனைவியாரைத்

தோற்றுவாய்க்கண் தானே சிறப்பித்தும், பின்னும் அவ்வாறே யும் கூறியவாற்றைக் காணலாம். ஏனையவற்றையும் ஆங்காங்குக் காணலாம். அவ்வெல்லாவற்றையும் ஈண்டுவிரிப்பிற் பெருகும்.

இவ்வாறு நோக்குங்கால் சேக்கிழார் பெருமான் பரம தத்தனை யாண்டும் இழித்துக்கூறியதாகக் காணப்படவில்லை. அன்றியும் அவனைச் சிலவிடங்களில் ஒருவாறு சிறப்பித்தும் கூறி யுள்ளார், அங்ஙனம் கூறப்பட்டதொடர்கள்; "நிகர்ப்பரிய பெருஞ் சிறப்பின்நிதிபதிதன் குலமைந்தன்," "பாங்குடைய நெறியின்கண் பயில்பரமதத்தன்," "மலர்புகழ்ப் பரமதத்தன்," "தோலைவில்சீர்க் கணவனார்" என்பன. ஏனைய இடங்கள் சிலவற்றிற் குறிப்பாற் சிறப்பித்துள்ளார். இங்ஙனம்சேக்கிழார் பரமதத்தனையாண்டும் இழித்துக் கூறாமையான், அவன் காரைக்காலம்மையார் கொண்ட சிவநெறிக்குத் தடைசெய்தனன் என்றோ, அல்லது உலகநெறியாகிய நல்லொழுக்க நெறியில்நின்றிலன் என்றோ கரு தினர் எனக்கொள்ளுதல் அமையாது. மேற்கூறியவாறு சில விடங்களில் ஒருவாறு சிறப்பித்துக்கூறியிருத்தலால் அவனை அற நெறியாகிய உலகநெறியில் நின்றனன் என்றுகருதினார் என்பது புலனாகின்றது. ஆகவே, பரமதத்தன் அவ்வறநெறிக்குரிய நற்பண்புகள் உடையவனே என்பது விளங்கும்.

இன்னும், சேக்கிழார் அம்மையாரது தந்தையை, "மானமிகு தருமத்தின் வழிநின்று வாய்மையினில், ஊனமில் சீர்ப்பெருவணிகர் தங்கள்குலத்தலைவனார்" எனவும், அம்மையாரது திருமணத்தைப் பற்றி "இவர்கள் மரபினுக்கேற்கும்—தோல்குலத்துவணிகர் மகட் பேசுதற்குத் தொடங்குவார்" எனவும், "நிதிபதியென் றுலகின்கட் பாடுபெறு புகழ்வணிகன்பயந்த குல மைந்தனுக்கு.... மகட்பேச .... வரவிட்டார்" எனவும், வந்த பெரியோர்கள் தனதத்தனை நோக்கி, "நீபயந்த - பைந்தொடியை நிதிபதி மைந்தன் பரமதத்தனுக்கு முன்னை மரபினுக்கேற்கும் முறைமை மணம்புரிகென்றார்" எனவும், "மற்றவனும் முறைமையினான் மணமிசைந்து" எனவும் "நிதிபதியும்....தனிப்பெருமகற்கு ....... வதுவைவினைத் தொழில் பூண்டான்" எனவும், பின்னர்க் "களி மகிழ் சுற்றம் போற்றக் கல்யாணம் செய்தார்கள்" எனவும் கூறு தலால், அம்மையாரது குலமும் பரமதத்தனது குலமும் மான மிகு தருமத்தின் வழிநிற்றலும் வாய்மையினில் ஊனமின்மையும் உடைமையால் ஒன்றற்கொன்று ஏற்புடையதே என்பதும், அதனால் பரமதத்தனும் அத்தகைய உயரிய பண்புகளை உடைய வனே என்பதும் அவரது கருத்து என்பது பெறப்படும்.

அங்ஙனமன்றி அவர் பரமதத்தனைப் பொய்யும்வழுவும் உடைய பூரியனாகக் கருதியிருப்பின், நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனை உலகம் குலத்தின்கண் ஐயப்படுதல் இயல்பாகலின் உயர் குலத்தவனாகக் கூறப்பட்ட நிதிபதியினுடைய **"குலமைந்தன்"** என்று இரண்டிடத்திலும், **"தனிப் பெருமகன்"** என ஓரிடத்திலும் கூறார். ஆகவே, ஆசிரியர் சேக்கிழார் பெருமான் பரமதத்தனை உலகநெறியில் நின்ற ஓர் நன் மகனாகவே கருதினார் என்பது துணிபு.

சேக்கிழாரது திருமொழியாற் பெறப்படும் துணிபு இதுவாக, இனி வரலாற்று நிகழ்ச்சிகளை நோக்குவாம்:

புனிதவதியார் நம்பனடியார் அணைந்தால் நல்லதிரு வமுதளித்தல், முதலிய செயல்களுக்குப் பரமதத்தன் இடையூறு செய்தனன்என்றேனும், வெறுப்புக்கொண்டனன் என்றேனும், அன்றி வேறு வகையான இழிதகைச் செயல் ஏதாவது செய்தனன் என்றேனும் கொள்ளுதற்குரிய குறிப்பொன்றும் அவ்வரலாற்றிற் காணப்படாமையால், பரமதத்தனை இழிதகையோனென்றல் கூடாது. அம்மையாரது செயலைத் தடுத்தலும் வெறுத்தலும் இன்மையால் பரமதத்தன் அவரது செயலுக்கு இசைந்தே இருந்தனனென்பது துணியக்கிடத்தலானும், அம்மையாரது உயரிய நிலையைத் தான் அறிந்தவுடனே அவரைத்தெய்வமாகக்கொண்டு தொடர்பின்றி ஒழுகி வந்தமையானும், பாண்டி நாட்டிற்சென்று வேறொரு மனைவியை மணந்து மகளைப் பெற்ற காலத்தும் தான் குலதெய்வமாகக் கொண்ட அம்மையாரை மறவாது அவரது திருப் பெயரையே அம் மகளுக்கிட்டு மகிழ்ந்தானுதலாலும், பின்னர்ச் சுற்றத்தார் அம்மையாரைத் தன்பால் கொண்டு வந்து விட்டபோதும் தான் முன் கொண்ட உயர்ந்த கொள்கையிற் பிறழாது அவரைத் தானும் வணங்கித் தன் மனைவியையும் மகளையும் வணங்குவித்தானுதலாலும், பின்னர்ச் சுற்றத்தார் வினவியபொழுது அவரது பெருமையை நன்கெடுத்துக்கூறி விளக்கினானுதலாலும் அவன் மிகச்சிறந்த நல்லியல்புடையன் என்பது இனிது விளங்கும்.

பரமதத்தன் அம்மையாரது செயலில் வெறுப்புடையனாயிருந்தும் பொருள் அவருடையதாதலின் அதனை வெளிப்படுத்தற்கு இயலாது அடங்கியிருந்தனன் எனின், அங்ஙனமாயின், உண்ணின்ற கருத்து எவ்வாறாயினும், எப்பொழுதாயினும் வெளிப்படா தொழியா தாதலானும், அங்ஙனம் வெளிப்படுதல்

பொதுமக்கள் மாட்டு எளிதில் நிகழுமாதலானும், அறிவிற் சிறந்த அம்மையார்க்கு அவனது உட்கிடக்கையைக் குறிப்பான் உணர்தல் அரிதன்றாகலானும் அம்மையார் அவனது கருத்தை அறிந்தேஉடைமை தம்முடையதாதல்பற்றி அவனதுகருத்துக்கு மாறாகத் தமது செயல்களைச் செய்து வந்தனராகல் வேண்டும். கற்புடைய மடவாராகிய அம்மையார், பொருள் தம்முடையது அவனுடையது என வேற்றுமை பாராட்டி, நீரிற்சுருட்டும் நெடுந்திரைகளை யொத்த நிலையில்செல்வத்தால் செருக்கிக் கணவன் வழிநில்லாது தம் இச்சைவழிச்செல்லும் சில மடவார் போல்பவரல்லர். அவர் கணவன் கருத்துக்கு மாறாகச் செய்தது நற்செயலே யாகலின் அதனாற் குற்றமின்றெனின் கற்புடை மகளிர்க்குக் கணவன் வழி நிற்றலினும் சிறந்த நற்செயல் பிறிதொன்றில்லை யாதலின் அங்ஙனம் கூறுதல் பொருந்தாது. கணவன் நல்வழியிற் செல்லாதொழியின் தமது இனிய சொல்லானும் செயலானும் அவனை இசையச்செய்து பின்னர் நற்செயல்களைச்செய்தலே கற்புடை மகளிர்க்கு அறமாகும். அம்மையார் கொண்டது சிவநெறியாதலின் அதற்கு உலகநெறியிற் சிறிது வழுவுதல் குற்ற மாகாதெனின், அஃதுண்மையே யாயினும் அம்மையாரது உள்ளநிலை உலகநெறியாகிய அறநெறியைநெகிழ விடாது பற்றிநின்றே சிவநெறியில் ஒழுகுவதாயிருந்தது. அது, "பாங்கில்வரு மனையறத்தின் பண்பு வழாமையிற் (சிவநெறியிற்) பயில்வார்" என்ற சேக்கிழார்பெருமான் திருமொழியால் விளங்கும். இதனாலன்றோ அம்மையார் தமது திருமண நிகழ்ச்சிக்கு இசைந்திருந்தனர்?

இனிப் பரமதத்தன் உள்ளத்தே வெறுப்புடையனாயவழி அதனை வெளிப்படுத்த அஞ்சி மனம்வெந்து புனிதவதியாருடன் வதிதற்குத், தனக்கு வேறுவழியின்றி வேட்டகத்திருந்து மனைவிக்கு வரிசையாகத் தரப்பட்ட பொருளைக் கொண்டு அவட்கு அடங்கி அவள்வழிநின்று வாழவேண்டிய நிலையுடைய அத்துணை வறிஞனல்லன், நிதிபதி யென்று உலகின்கட் பாடுபெறு புகழ் வணிகன் பயந்த குலமைந்தனாகலின். அவனைத் தனதத்தன் நாகைக்குப் போகவிடாது, காரைக்காலிலேயே இருக்க வைத்தது புனிதவதியார் தங்கள் குடிக்கு அரும்புதல்வியார் ஆதலினால், அவரைநீங்கலாற் றாமையானேயன்றிப் பிறிதொன்றானன்று என்பது நன்குவிளக்கப்பட்டுள்ளது. எனவே, சிறிது வெறுப்புத்தோன்றினும் அதனை அவன் வெளிப்படுத்தற்குத் தடையின்று.

இனிப் புனிதவதியார் அடியார்களைப் பேணி வருதற்குப் பயன் படுத்திய பொருள் முற்றும் அவருடையதே என்றல் கூடாது. முதற்பொருள் அவருடைய தாயினும், பொருளாட்சி போற்றுதார்க் கில்லையாதலின், அதனைப் போற்றிப் பெருகச் செய்து வந்தவன் பரமதத்தனே யாகலின் அப்பெருக்கங்கள் முழுதும் அவனுடையனவேயாம். அவன் பொருளை வளம் படப் பெருக்கினுனென்பதைத், "தகைப்பில் பெருங் காதலினால் தங்குமனை வளம்பெருக்கி—மிகப்புரியுங் கொள்கையினின் மேம் படுதல் மேவினான்" எனக் குறித்தனர் ஆசிரியர்.

சேக்கிழார் பெருமான் புனிதவதியாரைப், "பாங்கில் வரு மனையறத்தின் பண்பு வழாமையிற் பயில்வார்" எனவும், பரம தத்தனைப் "பாங்குடைய நெறியின்கட் பயில் பரமதத்தன்" எனவுங் கூறியிருத்தலின், மனையறத்திற்குப் பண்பாவது இல் லாட்கும் கணவற்கும் நெஞ்சொன்றுதற்கு ஏதுவாகிய அன்பே யாகலின், அப்பண்பு அவர்களது இல்வாழ்க்கைக்கு வாய்த் திருந்ததென்பதும், பரமதத்தனும் அந்நெறியிற் பயின்று வரு பவனே என்பதும் போதரும். போதரவே பரமதத்தன் அம்மையாரது நற்செயல்களில் இசைவுடையனு யிருந்தனன் என்பது இனிது பெறப்படும். அங்ஙனமாயின் பரமதத்தன் சிவனடியார் வந்து உண்டனரா எனக்கேட்டதாகத் தெரியவில்லை யாகையால், அவனுக்கு அச்செயல் இசைவென்பது கூடுமோ வெனின், அங்ஙனம் அவன் கேளாதது பற்றி அவனுக்கிசை வில்லை யென்றோ, அல்லது வெறுத்தன னென்றோ கொள்ளுதல் எங்ஙனம் கூடும்? அவனுக்கு அந்த நியமமில்லை என்று கூறலாமே யன்றி வெறுத்தனன் என்றல் கூடாது. அவன் சிவனடியாரை முன்னூட்டிப் பின்னுண்ணுதலும், அவர்கள் வாராத போது தேடி அழைத்துக் கொடுவந்து உண்பித்தலும் உடையனாய் இருப்பின், அவனும் நாயன்மார்களுள் ஒருவனுய் விடுவனன்றோ? ஆகவே அவனை அத்தகைய நிலையை அடையாதவன் என்றல் மட்டுமே சாலும்.

அஃது அங்ஙனமாயினும், பரமதத்தன் புனிதவதியாரை விட்டோடியதும், வேற்று நாட்டிற் சென்று இரண்டாவது மனைவியை மணந்து கொண்டு அங்குதானே தங்கி விட்டதும், பின்னர்ப் புனிதவதியாரைச் சுற்றத்தார் கொண்டு வந்து விட்ட போதும் அவர் காலில் வீழ்ந்து வணங்கியதும் அவன் இழி தகையோனென்பதையன்றோ காட்டுகின்றன வெனின், அவை

அவன் பெருந்தகையோ னென்பதைக் காட்டுவனவன்றி, இழி தகையோ னென்பதைக் காட்டுவன வாதல் யாங்ஙனம்? அவன் அம்மையாரைத் துறந்தமைக்குக் காரணம் யாது? அவர் இறைவன் திருவருள் கைவரப் பெற்றவர் என்றறிந்து அவரைத் தெய்வமாகக் கருதினமை யன்றோ? இறைவன் திருவருள் கைவரப்பெற்ற பெரியார்களின் உண்மை நிலையை அறிந்தவுடன் அவர்களை முன்போலத் தம்மில் ஒருவராக மதித்தலின்றித் தெய்வமாகவே மதித்து, அதுகாறும் அவர்கள் தமக்கு அடங்கி யொழுகும் நிலையிலிருந்து வந்திருப்பின் தாம் அவர்களை யவ்வாறு நடத்தி வந்தமைக்கு உள்ளம் பதைத்து அவரை வணங்கித் தம் குற்றத்தைப் பொறுக்குமாறு வேண்டிப் பின் அவர்களைத் தம் நினைவின் படிச் செல்ல விடுதலே யன்றோ மேன்மக்கள் செயலா வது?. சிறுத்தொண்டருக்குத் தலைவனுயிருந்த அரசனும், திரு வாதவூராருக்குத் தலைவனுயிருந்த பாண்டியனும் அவ்வாறே யன்றோ செய்தனர்? அஃது அவர்கட்குப் பெருமையாவதன்றிச் சிறுமை யாவதில்லை யன்றோ? பரமதத்தனும் அத்தகைய செயலையே செய்தது அவனது பெருந்தகைமையாலேயாம். புனிதவதியாரது பெருமையைத் தானுணர்ந்த அப்பொழுதே பரமதத்தன் அவரை வணங்கி யாவருமறிய அவரை நீங்கி யிருப்பன். ஆனல், தனதத்தன் முதலியோர் அம்மையாரது பெருமையைத் தானறிந்தது போலவே அறிவரென்பது ஒருதலையன்றுகலான், அச்சுற்றமென்னுந்தொல்பசுக் குழாங்கள் பற்றியிழுத்து இருவரையும் வலிதில் உடனுறைந்து வாழச் செய்வரென்று கருதி அங்ஙனஞ் செய்யாது மறைத்துச் சின் னுட்குப் பின்னர் ஏற்றதோராற்ருல் விட்டு நீங்கினன். அவன் கலத்தின் மேற் சேறல் குறித்த காலையில் "நெடுநிதி கொணர் வேன்" எனக் கூறியதும் அச்சொல் இப்புரைதீர் நன்மையைப் பயப்பது கருதியாகலின், அப்பொய்ம்மையும் வாய்மையிடத்த தேயாம். இவ்வாற்ருல் வரலாற்றை நோக்கினும் பரமதத்தன் இழிதகைமை யுடையன் எனக்கொள்ளுதற்குரிய குறிப்பு ஒன்று மில்லை யென்பது பெறப்பட்டது.

இங்ஙனஞ் சேக்கிழார் பெருமான் திருமொழியாலும் வர லாற்று நிகழ்ச்சிகளாலும் பரமதத்தன் நல்லியல்புடையனென் பது விளங்கவும் அவனைக் கீழ்மையுடையனுக மதிக்கும் ஓர் எண்ணம் தம்மையறியாது சிலரிடத்து உண்டாதற்குக் காரணம் என்னையெனின், அவன் கொடுப்பித்த மாங்கனிகள் இரண்டனுள் ஒன்றை அம்மையார் அவனுக்குப் படைக்க அதனையுண்டு அவ் வளவின் அமையாது "இனையதொரு பழமின்னுமுளததனை

யிடுக" எனக் கேட்டமையேயாம். இஃதொன்றே அவன்பால் நிகழ்ந்த குற்றம். ஆயினும், இஃதொன்றைக் கொண்டே அவனைக் கீழ்மகன் என்று கூறிவிடுதல் கூடாது. "பானைச் சோற்றிற்கு ஒரு சோறு பதம்" என்னும் முறையுளதாயினும் அஃது இன்னோரன்னவற்றிற்குப் பொருந்தாமை யறிக.

ஆயின், அக்குற்றம் அவன் மாட்டுநிகழ்ந்ததுஎற்றாலெனின், இறைவன் திருவருட் செயலானே யன்றிப் பிறிதொன்றானன்று. என்னையெனின், பாங்குடைய நெறியின்கட்பயில் பரமதத்தனைக் காணவந்தவர் பிற கையுறை கொணராது மாங்கனியே கொணரவும், அதுதான் ஒன்றுமாகாதுமூன்றுமாகாது இரண்டேயாகவும், அவற்றைப் பரமதத்தன் ஆண்டுத்தானே பலர்க்கும் பகிர்ந்து தானும் உண்டொழியாது பெரும்பொருள் போன்று இல்லத்திற்கு விடுப்பவும் அன்றுதானே ஓர் அடியவர் சற்றுப் பின்னர் வாராது, கறியமு தங்குதவாதே திருவமுது மட்டும் கைகூடும் நேரத்தில் கறியமுது கைகூடும் வரையில் தாழ்க்கப் பொறாத உணவின் மிகு வேட்கையராய் வரவும், அவர் உண்டுவந்து போய பின்றைப் பரமதத்தன் வந்து உண்ணுங்கால் தனக்களித்த ஒரு மாங்கனியோடமையாது, 'இனையதொரு பழம் இன்னும் உளது அதனையிடுக' எனச்சற்று வன்மையாகவே கேட்பவும்' 'அஃது அடியவரை உவப்பித்தற்காயிற்று' எனக்கூறின் வருவதோரிழுக்கில்லையாயினும் அம்மையார் அங்ஙனங்கூறாது அதுகொணர்வார் போல் அவ்விடத்தை விட்டகலவும், அது வாயிலாகத்தானே இறைவன் திருவருள் அம்மையாரிடத்து விளங்கி நிற்றலைப் பரமதத்தன் அறிந்து அஞ்சி அவரது தொடர்பை விட்டு நீங்கவும் நேர்ந்த நிகழ்ச்சிகளை யுற்றுநோக்கின் புனிதவதியார்க்கு அருள்புரியும் செவ்விநோக்கி இறைவன் அவரை உலகநெறியின் நீக்கி ஆண்டருளுதற்கே இவ்வாறு செய்தனனென்பது விளங்குமாதலினென்க. இன்னும் இறைவன் அம்மையார்க்கு முதலில் அளித்த மாங்கனியைப் பரமதத்தன் முதலிலுண்ட மாங்கனியின் சுவைபோன்ற சுவையுடையதாகத் தாராது, அதனோடிதனிடை வேற்றுமை பெரிதாகி, "இதுதான் முற்றரு மாங்கனியன்று மூவுலகிற் பெறலரிது" என உணருமாறு மிகுந்த சுவையுடையதாகத் தந்தமையால் இச்செயல்கள் இறைவன் திருவுள்ளக் குறிப்பானே நிகழ்ந்தனவென்பது தெற்றென விளங்கும். என்னை? அவ்வுணர்ச்சி யவனுக்குண்டாகாதொழியின் பின்னைய நிகழ்ச்சிகள் நிகழாவாகலின், அவை நிகழ்தற் பொருட்டே இறைவன் அதனை அங்ஙனந் தந்தனன் எனல் வேண்டுமாதலினென்க.

பரமதத்தன் இரண்டாவது கனியையும் இடுக வென்றது தனக்கியல்பாயுள்ள தன்னலமே நோக்கும் இழிதகவினாலன்று. அக்கனியின் சுவைமிகுதியால் தன்னியல் பழிந்து அச்சுவை யுணர்ச்சி மீதூரப் பட்டமையானேயாம். இதனையே "மனைவி யார் தாம்படைத்த மதுரமிக வாய்த்தகனிதனை நுகர்ந்த இனிய **சுவை ஆராமைத்** தார்வணிகன் - இனையதொரு பழமின்னும் உள ததனை இடுக என" என்றுசேக்கிழார் குறித்தருளினார். அவன் அந்நிலையை அடையச் செய்தது இறைவன் திருவருட் செய லாகும். ஆகவே, அக்குற்றம் பரமதத்தனது இயற்கையால் நிகழ்ந்ததன்றென்க.

அங்ஙனமன்றி அவன் இரண்டு கனிகளையும் தானே உண்டு களிக்கக் கருதினனாயின் முதலிலே தானே இரண்டு கனிகளையும் படைக்குமாறு கேட்டிருப்பன். அன்றி இடையிலேனுங் கேட் டிருப்பன். அவ்வாறன்றி முன்னர் வைத்தகனியை முற்றும் உண்ட பின்னரே கேட்டமையான் அவன் சுவைமிகுதியில் ஈடுபட்டமை புலனாம். இன்னும் அவன் அக்கருத்துடைய னாயின் அக்கனிகளை இல்லத்திற்கு விடுத்திரான். வாணிபத் துறையிற்றானே அயின்றிருப்பன். ஆண்டு அவனுக்குப் பெரிய தடையொன்றுமில்லை. அங்ஙன மின்மையால் அக்கனிகளைக் கண்ட துணையானே அவற்றைத் தனது அன்பின் மிக்க மனைவி யாரும், பிறகிளைஞரும் உண்ணல்வேண்டுமென்னுங்கருத்தானே அவற்றை இல்லத்திற்கு விடுத்தனனாகல் வேண்டும். இது பற்றியே பரமதத்தனது கூற்றில், "ஈங்கிவற்றை இல்லத்துக் **கோடுக்க** எனஇயம்பினான்" என்றார்ஆசிரியர். வைக்க என்னாது "**கோடுக்க**" என்றதனால் அவற்றை அப்படியே வைத்தல் வேண்டுமென்பது அவனது கருத்தன்றென்பது புலனாம். ஆகவே, அவற்றுள் ஒன்றையும் அம்மையார் அவனுக்குப் படையா தொழியினும், ஓர்கால் அவன் கேட்டனனாயின், அவை தமக்கும் பிறர்க்கும் ஆயினவென அம்மையார் கூறியிருப்பினும் அவன் வெகுளான்.

(தொடரும்.)

# வினையுணர்வும் ஞானசம்பந்தரும்*

திரு. வித்துவான், ஔவை. சு. துரைசாமி பிள்ளை அவர்கள்
தமிழாசிரியர், போளூர்

(முற்றொடர்ச்சி துணர் 15, மலர் 10 பக்கம், 403)

இனி, உயிர்களைப்பற்றிநிற்கும் வினைகளின் தொடர்பு கெடுதற்கு ஆண்டவனை வழிபடும் செய்கையே உரிய செய்கை யாகும் என்பதைப் பல திருப்பாட்டுக்களில் வெளிப்படை யாகவும், உள்ளுறுத்தும் ஞானசம்பந்தப் பிள்ளையார் தெருட்டி யருளுகின்றார். வெளிப்படையாகத் தெருட்டுதலைக் காட்டும் பாசுரங்கள் மிகவாய்ப் பல்கி யாவரும் காணக்கிடத்தலின், அவற்றை விலக்கி உள்ளுறுத்துரைக்கும் பாசுரங்கள் சிலவாய்ச் சிலரே காணத் தக்கவாய் இருத்தலின், அவற்றுள் ஒன்றைக் கூறுகின்றாம்.

நம் ஆளுடைய பிள்ளையார் சீகாழிக்கருகிலுள்ள திருக் கோலக்கா என்னும் திருப்பதிக்குச் சென்று, தம் மெல்லிய கைகளால் தாளம் போட்டு "மடையில் வாளைபாய" என்ற திருப்பதிகத்தைப் பாடியருளிய செய்தி தமிழ்நாடு நன்கறிந்த தாகும். ஆயினும், இப்பதிகத்துள் உயிரறிவு ஆண்டவனைப் பாடிப் பரவுதலால் கலங்கி அருண்மணங்கமழ்ந்து, வினைப் பிணிப்புத் தளர்ந்து, அறியாமை நீங்கிப் பேரின்ப நுகர்ச்சிக் குரிமையெய்தும் திறத்தை உள்ளுறுத்துரைக்கின்றார்.

"மடையில் வாளைபாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையும் சாம்பற் பூச்சும்கீள்
உடையும் கொண்ட உருவம் என்கொலோ"

என்பது முதற்பாசுரம். இதில், அடியார்கள் பரமனது அருள் நினைந்து பாடிப்பரவித் திளைத்தலால், அவர்தம் உயிரறிவு கலங்கி

*இது கரந்தைத் தமிழ்ச்சங்க இருபத்தெட்டாம் ஆண்டுவிழாவில் நிகழ்த்திய சொற்பொழிவாகும்.

அருண்மணம் கமழுகின்றதென்பதனை, "மடையில் வாளைபாய, மாதரார் குடைதலால் நெய்யொடுகுங்குமம் நிறைந்துநறுமணம் கமழும் பொய்கை" என்பதனால் குறித்தருளுகின்றனர்.

அருள் நினைந்து பரவிப்பாடியாடும் அடியார்உள்ளம் அவன் அருண்மணமே கமழ்தற்குரிய அவனது அருளை, அருள் நிலையை அடுத்த பாசுரத்தில்,

"பெண்டான் பாகமாகப் பிறைச் சென்னிக்
கொண்டான் கோலக்காவு கோயிலாக்
கண்டான் பாதம் கையாற் கூப்பவே
உண்டான் நஞ்சை யுலக முய்யவே"

என்று அருளுகின்றார். பெண்ணென்பது திருவருள், பெண்ணைப் பாகங்கொண்டதோடு பிறையைச் சென்னியிற் கொண்டதும் அருளே என்பதனைப் பிறிதோரிடத்தில், "முன்னுயிர்த்தோற் றமும் இறுதியுமாகி, முடியுடையமரர்கள் அடிபணிந்தேத்தப், பின்னிய சடைமிசைப் பிறைநிறைவித்த பேரருளாளனார் பேணிய கோயில்" என்றும், பெண்ணைப்பாகம் கொண்டதும் உயிர்கட்கு அருள்செய்தற்கே என்பதை, "ஆணும் பெண்ணுமாய் அடியார்க் கருணல்கிச், சேணின்றவர்க் கின்னம் சிந்தை செயவல்லான், பேணிவழிபாடு பிரியாதெழுந்தொண்டர், காணும்கடல்நாகைக் காரோணத்தானே" என்புழியும் விளக்கியருளுகின்றார்.

இத்தகைய அருள்வள்ளல், தன்னைவிரும்பிப் பாடியவழி, அடியார் வினைப்பிணிப்புப் பறையச்செய்யும் எளிமையுடையன் என்பதனை,

"பூணற் பொறிகொள் அரவப் புன்சடை
கோணற் பிறையன் குழகன் கோலக்கா
மாணப்பாடி மறை வல்லானையே
பேணப் பறையும் பிணிகளானவே"

என்று கூறியருளுகின்றார். உயிர்களைப் பிணித்து நிற்றலின், வினைகளை ஈண்டு, "பிணிகளானவே" என்கின்றார். "பாடுவா ரிசைப் பல்பொருட்பயன் உகந்தன்பால், கூடுவார் துணைக் கொண்டதம் பற்றறப் பற்றித், தேடுவார் பொருளானவன்" (தேவூர்) எனப் பிறிதோரிடத்து வெளிப்படையாகக் குறித் தருளுகின்றார்.

இங்ஙனம்பிணித்துக்கொண்டுநிற்கும் வினைகளைத்தகர்க்கும் முறையினை அடுத்தபாசுரத்தில் மிகவருமையாகக் குறிக்கின்றார். பரமன் கையில் ஏந்தும் மழுப்படையின் வெம்மையாலும், மறிமானின் முழக்கத்தாலும் உயிரறிவைத் தழுவிப் பிணித்து நிற்கும்வினைக்கட்டு முதற்கண் தளர்ச்சியெய்துகின்றதென்பார்.

" தழுக்கொள்பாவம் தளர வேண்டுவீர்,
மழுக்கொள் செல்வன் மறிசேர் அங்கையான்
குழுக்கொள் பூதப் படையான் கோலக்கா
இழுக்காவண்ணம் ஏத்தி வாழ்மினே "

என்று அருளுகின்றார். வினைப்பிணிப்பை விரையநீக்கியவழி யெய்தும் கேடு கருதி, பையநீக்குவராதலின், அதுகுறித்து, அவனை, "ஏத்தி வாழ்மின்" என அறிவுறுத்துகின்றார். பைய நீக்குவதே அவரது பான்மையென்பதனைப் பிறிதோரிடத்தும், "செய்யமேனி வெளிய பொடிப்பூசுவர், சேரும் அடியார் மேல்,* பையநின்ற வினைபாற்றுவர், போற்றிசைத்தென்றும் பணிவாரை, மெய்ய நின்றபெருமான்" (புகலூர்) எனமொழிந்தருளுகின்றார். ஏத்துமிடத்தும் இழுக்காவண்ணம் ஏத்திவாழ்மின் என்கின்றார். "துறக்குமா சொலப்படாய் துருத்தியாய் திருந்தடி, மறக்குமா றிலாதவென்னை மையல் செய்து மண்ணின்மேல், பிறக்குமாறு காட்டினாய் பிணிப்படும் உடம்பு விட், டிறக்குமாறு காட்டினாய்க் கிழுக்குகின்ற தென்னையே" என்று திருப்பாட்டிலும், இழுக்கிய வழி, பிறக்குமாறு காட்டுதலும், இழுக்காவழி, பிறப்புவிட்டு இறக்குமாறுகாட்டுதலும் உண்மையின், 'இழுக்குகின்றதென்னை' என்று வற்புறுத்துதல் காண்க.

இவ்வாறு, தழுவிட்டுத்தளர்ச்சியெய்தியவினை, நீங்கற்குரிய பாகம் பெறுவதற்கு உரிய முயற்சி, அவனைவிடாது பயிலும் பயிற்சியே யாகும் என்பர்.

" மயிலார் சாயல் மாதோர் பாகமா
எயிலார் சாய எரித்த எந்தை தான்
குயிலார் சோலைக் கோலக் காவையே
பயிலா நிற்கப் பாவம் பறையுமே"

என்றுமொழிந்தருளுகின்றார். குயில்கூடிப்பாடி மகிழும்சோலை கூறவே, கோலக்காவில், அடியார் பலரும் சேரவிருந்து அவன்

* அடியார் மேல் நின்றவினை பையப் பாற்றுவர் என இயையும்.

திருவருளைப் பாடுதல் பெற்றும். அடியாரொடு பயிலுதல் வேண்டும், அல்லாதார் அஞ்ஞானத்தை யுணர்த்துவர். "உரை தளர்ந்துடலார் நடுங்காமுனம், நரை விடையுடையானிடம் நல்லமே, பரவுமின் பணிமின் பணிவாரொடே, விரவுமின் விரவாரை விடுமினே" என நாவரசப்பெருமானும், "மறப்பித்துத்தம்மை மலங்களின் வீழ்விக்கும், சிறப்பிலார்தம் திறத்துச் சேர்வை-அறப்பித்துப், பத்த ரினத்தனுய்ப் பரன் நினைவினுலுணரும், மெய்த்தவரைமேவாவினை" எனமெய்கண்டதேவநாயனுரும் தெருட்டி யருளுதலால் இவ்வுண்மையை அறிகின்றும்.

இத்தகைய பயிற்சியால் நீங்குதற்குரிய பக்குவம்பெற்று வரும் வினைகள், பின்னர், அவன் திருவடி ஞானத்தால் வெடிபட்டு வீற்று வீற்ருேடிவிடும்; ஆதலால், அத்திருவடியை அடைந்து வாழ்மின் என அடுத்தபாசுரத்தில், நீங்கற்குரியவாய் வரும் வினைகள் அறவே நீங்கும் முறையைத் தெரிவிக்கின்றுர்.

> " வெடிகொள் வினையை வீட்ட வேண்டுவீர்,
> கடிகொள் கொன்றை கலந்த சென்னியான்
> கோடி கொள்விழவார் கோலக்காவுளெம்
> அடிகள் பாதம் அடைந்து வாழ்மினே"

என்பதுபாசுரம். இதன்கண் வெடிகொளல் என்பது சிதர்த்தொழிதல்; கடிகாவில் கால்துரற்றெறிய வெடிபட்டு, வீற்று வீற்ருேடும் இனமயில்போல், கேளிர் பிரிந்தார் அலறுபவே" (களவழி 40) என்பதனுல் அறிக. மெல்ல நீங்கிவரும் வினைகள் மீட்டும் முன்னைப் பயிற்சிவயத்தால் மீளத் தோன்றுவண்ணம் கெடுக்க வேண்டியிருத்தலால், "வினையை வீட்டவேண்டுவீர்" எனவிளித்து, "அடிகள்பாதம் அடைந்து வாழ்மினே" என்று அருளுகின்றுர். இக்கருத்தையே, திருமாகறற்பதிகத்தும்,

> " வெய்யவினை நெறிகள்செல வந்தணையும்
> மேல்வினைகள் வீட்டலுறுவீர்,
> மைகொள்விரி கானல்மது வார்கழனி
> மாகறலுளான் எழிலதார்
> கையகரி கால்அரையின் மேலதுரி
> தோலுடைய மேனியழகார்
> ஐயனடி சேர்பவரை யஞ்சியடையா
> வினைகள் அகலுமிகவே,"

என்று அறிவுறுத்துகின்றார். மேல்வினைகளை வீட்டிய வழி, நின்ற வினையும் பற்றுக் கோடின்றிக் கெடும் என்றற்கு,

"நிழலார் சோலை நீலவண்டினம்
குழலார் பண் செய் கோலக் காவுளான்
கழலால் மொய்த்த பாதம் கைகளால்
தொழலார் பக்கல் துயரமில்லையே"

என்று பாடியருள்கின்றார். பாதம் நினைந்து தொழுமிடத்து, அதன் அழலொளி வினையிருள் எய்தாவகைக் கெடுத்தலின், அடியார்க்குத் துயரமில்லை யென்பர். "பாதம் கைகளால் தொழலார் பக்கல் துயரமில்லையே" என்றார். "அழகாய கழலான் அடிநாளும் கழலாதே விடலின்றித், தொழலாரவர் நாளும் துயரின்றித் தொழுவாரே" (நெய்த்தானம்) எனப்பிறுண்டும் இதனையே தெருட்டுவர்.

நிழல் மிக்க சோலையின், வண்டினம் தேனுண்டு பண்பாடும் எனவே, அவன் திருவடி நீழலில் பெரும் போகம் துய்க்கும் மகிழ்வால், அடியார்கள் அவன் திருப்புகழ் பாடுதல் பெறப்படும். நாவரசரும், பரமன் திருவடி செந்தேன் பொழியும் என்பதனை, "சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப்பொழிவன" என்றே மொழிந்தருளுகின்றார்.

இவ்வாறு, வினையியல்பும், அது பரமன்வழிபாட்டால் நீங்கு மாறும், நம் ஆளுடைய அடிகள் வெளிப்படையாகவும், உள்ளுறுத்தும் தெரிவித்தருளிய போழ்தும், சிலர்பலர், அவ்வினையியல்பை யுணர்ந்தும் அயர்ந்திருந்தனர். அவர்க்கு நல்லறிவு கொளுத்துவார் திருநீலகண்டத் திருப்பதிகத்தில் அவர்தம் கொள்கையை மறுத்துப் பரமனை வழிபாடு புரியுமாறு நன்கு தெருட்டுகின்றார்.

"அவ்வினைக் கிவ்வினையாம் என்று
சொல்லு மஃதறிவீர்,
உய்வினைநா டாதிருப்பதும் உந்தமக்
கூனமன்றே,
கைவினைசெய் தெம்பிரான் கழல்போற்றுதும்
நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறா
திருநீலகண்டம்"

என்பது அப்பாசுரம். இதன்கண், வினைமேற்பழியேற்றி, தாம் நுகரும் பயன் யாவும் முன்னைவினையால் வந்தன என்பாரை நோக்கி, "அவ்வினைக் கிவ்வினையாம் என்று சொல்லும்" அதனை மட்டில் அறிந்திருக்கின்றீர்களே, அவ்வறிவால், அவ்வினையைக் கெடுத்தற்குரிய நெறியும் காண்டல் கூடும் என்பதை அறியா திருப்பது உமக்குக்குற்றமாகுமே" என்பார், "உய்வினை நாடா திருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே"யென்றார். கெடுத்தற்குரிய அந்நெறியும் வேறன்று; ஈதே என்றற்கு, "கைவினை செய்து எம்பிரான் கழல் ஏத்துதும்" என்றும், "அதுதவிர யாம் வேறு செய்தற்குரிய நெறியில்லோம்; ஏனெனில், நாம் அவ்வாண்டவ னுக்கு அடிமை" என்பதனை வற்புறுத்த நினைந்து, "நாம் அடியோம்" என்றும், அச்செயலால் நாம் தூய சத்துப்பொரு ளாதலின், அசத்தாகும் செய்வினைகள் வந்து சேர்வது இல்லை யாம்" என்பார். "செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறா" என்றும், இதற்குச்சான்று "திருநீலகண்டமே" என்றும் தெருட்டியருளுகின்றார். "சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச் சார்தரா சார்தரும் நோய்" என வள்ளுவப் பெருந் தகையும் வழங்கியிருக்கின்றார்.

இதுகாறும் கூறியவாற்றால், வினையுணர்வின் பயன் பரமன் திருவடியைப் பரவித் தொழுவதேயன்றிப் பிறிதில்லை யெனத் திருஞானசம்பந்தசுவாமிகள் தெருட்டியருளுகின்றார் என்பதாம்.

" பிறவியெனும் பொல்லாப்பெருங்கடலை நீந்தத்
துறவியெனும் தோற்றோணி கண்டீர்—நிறையுலகின்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ்"

உ

# வள்ளல் கண்டீரக்கோப் பெருநள்ளி

(ஒரு சிறு நாடகம்)

சிவ. குப்புசாமி

*தலைமையாசிரியர், கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி, தஞ்சை*

(முற்றொடர்ச்சி துணர் 15, மலர் 10, பக்கம் 396.)

இயல்-௩—காட்சி-௩

**உறுப்பினர் :—** வன்பரணர் ; இளஞ்சேய் ; இளநங்கை.

**இடம் :—** தோட்டிமலை நகர்ப்புறம்.

**பொழுது :—** மாலைப்பொழுது.

[நள்ளியின் கோடையை வன்பரணர் வியத்தல்]

**இளஞ்சேய் :—** தந்தாய்! ஆண்டு நோக்குங்கள். உயர்ந்த மாடங்களும் வானளாவிய விமானக் கோயிலும் நீண்ட மதிலும் பெற்றதோர் ஊர் காணப் பெறுகின்றது. அஃதென்ன ஊர்?

**வன்பரணர் :—** என்மகனே! அதுதான் நாம் செல்லுதற் குற்றஇடம்; நம்பால் வேட்டுவனாக வந்துசென்ற, கொடைமடம் பெற்ற வேந்தனின் பெருமைமிக்க நகரமாம். **(அன்புமீக்கூர)** எளியார்க்கிரங்கி இருந்தருள்புரியும் எம் இறைவ! என்னே நினதருட்டிறம்? நள்ளியின் உயரிய கொடைமுறை, என் தலைமுறைக்கே எட்டாத் திறம்பெற்றதாகின்றது. 'யானேஉயிராவேன், எனக்கருதும் வேல்வேந்தன் முறைசெயும் நாட்டினில் நெல்லும்நீரும் உயிரன்று; ஒரு குடைக்கீழ் ஆளும் மன்னர்க்கும் ஒன்றும் கல்லா வறிஞர்க்கும் உண்பதும் உடுப்பதும் பிறவும் ஒன்றே யாதலால் எளியவர்க்கீவதே பொருட்பயனும்; அன்றித்

தானே நுகரின் பெரும்பிழைநிகழும்' என உளங்கொண்டகோப் பெருநள்ளி, கிடைத்தற்கரிய தேவாமுதம், இறைவனால் தரப் பெற்றதாயினும் தனக்கே யுரிமை கொள்ளாத் தன்மையனே யாவன்; மற்றும், எவரிடத்தும் இன்புடையான் இவனே. அஞ்சு தற்குற்ற இழிவுக்கு நாணும்இவன், புகழ்தரும் தொண்டினிற் சோம்பிநில்லாது, தன்னுயிரைக் கொடுத்தும் பணியாற்றுவன்; பழிபிறங்குந் தீநெறியாயின், உலகமே கொடைப் பொருளாகவரி னும் அதனை ஒதுக்கித்தள்ளி அச்சிறுநெறி சேராது 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாய்'த் திகழும் பெற்றியனே யாவன். இவனாலன்றோ, இன்று இவ்வுலகு நிலைத்துள்ளது.

இளநங்கை :—எந்தாய்! 'நள்' என்னும் இனிய ஓசை பெற்ற மாலைப்பொழுதினில் மருதம் என்ற இசைப்பாட்டுடையும் காலைப்பொழுதினில் கையகத்துள்ள யாழின் இசையோடு, செவ்வழி யென்னும் நல்லிசைப் பண்ணையும் வாசித்து மகிழ்ந்து வாழும் முறைமையை, நம்முடைய பாணர் மரபினர், நள்ளி-வள்ளலின் எல்லையற்ற வள்ளன்மைப் புரப்பினால் மறந்து போயினர்' என, முன்புஎன்பால் தங்களால் சிறப்பிக்கப்பெற்ற அந் 'நள்ளி' என்பவர் யாவர்?

வன்பரணர் :—'என் அருமை மகளே' அன்று என்னாற் சுட்டப்பெற்ற அவரே, இன்று நம்மையெல்லாம் ஆட்கொண்ட நள்ளியாவர். (நகர்நோக்கி) நள்ளி! நீ நெடிது வாழ்க! இசை யொலிசெய்து வீழும் அருவியுற்ற உயர்ந்த மலைநாட்டு நள்ளி! நீ நெற்களஞ்சியம் விளங்கும் பெரியநகரத்தை யுடையாய்; உயரிய அணிகலனும் யானையும் கொணர்ந்து, நாளும் இரவலர்க்குக் கொடையாக ஈயவல்லாய்; ஆதலால், நள்ளி! எனது நா, நினது தளர்வில்லா வலிய முயற்சியாலாய செல்வத்தை வாழ்த்து கின்றது. ஆனால், பிறர்க்குக் கொடுத்துவாழும் பெருமையற்ற வேந்தரைப்புகழ நினைந்து, அவர் செய்யாதன சொல்லி, அவர்தம் பண்புகளைச் சிறப்பித்துக் கூற, எம் சிறிய செவ்விய நா, அறி யாததாயிற்று.

இளஞ்சேய் :—அண்ணல்! நாம் புறப்படும்போது,—ஒன்று கூறினீர்களே? 'புலவர் பெருந்தகை, பெருந்தலைச் சாத்தனார், ஒருநாள், கண்டீரக்கோவின் தம்பியாகிய இளங்கண்டீரக்கோ என் பாரும் இளவிச்சிக்கோ என்ற ஓரிளவரசரும் ஒருங்கே மகிழ்ந்து உரையாடிக் கொண்டிருந்த இடத்திற் போந்து, இளங்கண்டீரக் கோவை மட்டும் உளமார மார்புறத்தழுவி, இன்மொழி புகன்று

வாழ்த்தி, மற்றவரை யேறிட்டுங் காணாராயினர்' என்றுரைத் தீர்களே; அஃதேன், எனத் தாங்கள் விளக்கவில்லையே.

**வன்பரணர் :**—என் அன்புமிக்க இளஞ்சேய்! தன்னைத் தவிர்ந்து, இளங்கண்டீரக்கோவைப் புலவர் தழுவினமைக்கு நாணமும் துயரும் பெற்ற இளவிச்சிக்கோ, 'நீவிர் ஏன் என்னை, தழுவி மகிழ்ந்துரையாடாது வெறுத் தொதிக்கினீர்?' எனக் கேட்டான். அதற்குப் பெருந்தலைச் சாத்தனர், இளவிச்சிக்கோ தலைகுனிந்து வாடுமாறு மறுமொழி புகன்றார். அஃதென் னெனில், "வானளாவிய உயர்ச்சி பெற்ற சிறந்த மலைப்புறத்தே சென்ற தம் கணவர், நெடுந் தொலைவிலுள்ளபோது, தம்மைச் சிறப்பித்துப் பாடிவரும் புலவர் பெருமக்கள் காத்திருக்குமாறு செய்யாது, மிக்க பழங்காலந் தொட்டு, அணிகள்பெற்ற புல்லிய தலையினையுடைய பெண் யானையினைப் பரிசிற்பொருளாக்கித் தம் தகுதிக் கேற்ப, அப்புலவர்கள் மகிழுமாறு, தம்பெண்டிரும் கொடுக்குமாறுள்ள சிறப்பு மிக்கவள்ளன்மையால், புகழ்மேவிய கண்டீரக்கோ இவன் ஆதலால், யான் உவந்து பெரிதும் தழுவி மகிழ்ந்தேன். நீயோ, பொற்றேர் பெற்ற நன்னன் மரபின னாயினும் தழுவி யேற்பதற்குரியவனாயினும் விளங்கும் மொழி வளம் பெற்ற புலவர்கள் அணுகாமல், நுங் கோயிலின் வாயிற் கதவினை அடைத்தமையால், தெய்வ மகளிர் வாழுமாறு உயர்ந் துள்ள, அடுக்குகள் நிறைந்த, மலர்மணம் தவழும், அசைகின்ற முகில் பொழியும் நும் மலையைப் புலவர்கள் பாடாது நீங்கினர். ஆதலால், யானும் நின்னைத் தழுவ உளம் பெறாதவனாயினேன்.' என்பதாம்.

**இளநங்கை :**—தந்தாய்! நம் புலவர்தம் பேச்சு, எத்துணைச் செருக்குடன் சற்றும் அச்சமற்றதாய தன்மையைப் பெற் றுள்ளது? பெருந்தலைச் சாத்தனர். மிக்கஉளத்திட்பம் பூண்டவ ராகவே காணப்பெறுகின்றார். அவர் ஒருமறப்புலவர் போலும்?

**வன்பரணர் :**—என் மகளே! நீகொண்ட கருத்து பொய் யன்று 'பொய்யில் புலவர்' என நம்செந்தமிழ்நாடு சிறப்பித்துக் கூறுமாறுள்ள புகழ்ச் செல்வமாய ஓர் உயர்தகுதி, யாம் உண்மைக்கு மாறாயின கூறி இழுக்குற்று வாழ்ந்தால், எமக் கின்று எய்துமா? என் இனிய மென்மொழி நங்காய்! இம்மண் ணகத்தில் 'கொடை' யென மொழிந்தால், ஒன்றுமில்லாது வருந்துகின்ற வறியார்க்கு, அன்புடன் அளித்து மகிழும்போது தான் அப்பெயர்க்குப் பொருளுண்டு. அவ்வாறின்றி, வறு

மையை யுணராதார்க்கொன்று தருதல், இழுக்குற்ற ஒருவகை யுதவியே தவிர, 'ஈகை' எனும் பொருட்குரியதன்று. இற்றை ஞான்று, அம்முறை சிறிது வழுவியுள்ளது. பட்டாடை யுடுத்திப் பாகைதலைக்கணிந்து, கட்டான கஞ்சுக மெய்காட்டி, தட்டின்றிக் கட்டுரைகள் கூறுங் கணையாழிகையற்கே வட்டமிலா வருமானமுண்டு; அவ்வாறின்றி, யென்னையொத்து, யாக்கைப் புறந்தோன்ற, யாதும் தலைக்கின்றிப் போக்கற்ற சிந்தையராய்ச் சென்றால், சிச்சீ, மடப்பயலே! செல்லடா மட்டி! என்ற திட்டுக்கள்தான் பெறலாகும். அந்தோ! கண்ணார் கடல்சூழ் ஞாலமே! நின்பால் தோன்றிய மக்களின் உளப்பாங் கிருந்தவா றென்னே?

இளஞ்சேய் :—அண்ணால்! இப்பெரிய கடல் சூழ்ந்த இயற்கை யழகு மிக்க இந்நிலவரைக்கண், அன்பு கெழுமிய ஆன்றோர்கள், இன்றில்லாது போயினரோ?

வன்பரணர் :—அஃதன்று, மகனே! கொழுஞ்சேற்றில் நிற்கும் செழுந்தாமரை, அழகும் மணமும்பெற்று மக்களைமகிழ் விப்பதுபோல, இன்பமும் துன்பமும்கூடிய இந்நானிலத்தில், தம் துன்பத்தையுன்னாது, பிறர்படும் துயரினைத் துடைத்து மகிழும் சான்றோரும் இன்று தோன்றாமலில்லை. அவர்கள் தோன்றியதாலன்றோ, இவ்வையகத்தே யாண்டும் முகில்வளஞ் சுரக்கின்றது. மற்றும், என்மக்காள்! அச்சான்றோருட் சிலர், இரவலராவார், தம்பாற் பலகால் போந்து, புகழ்ந்துரையாடி இறைஞ்சுவாராயின் கொடையளி செய்கின்றனர்; ஒருசாரார், ஒருகால் சென்று புகழ்ந்துரையாடியதும் அருளுகின்றனர்; மற்றும் ஒரு சிலர், இரவலர் செல்லுமுன் அன்னவர் தம் குறிப்புணர்ந்து ஈகின்றனர். இப்பெருஞ் சீர்மிகும் இவர்கள், முறையே கடை, இடை, தலைக்கொடையினர், என்று போற்றப் பெறுகின்றனர். என்றாலும், நம்மை யாட்கொண்ட வள்ளல் பெருமான் கண்டீரக் கோப்பெருநள்ளியைப்போன்று, இன்னா ரென அவரை யாம் உணராதபோதே, நம்மிடம் வலிய மகிழ்வோடு போந்து, நம் எளிமையைக்கண்ணுற் றிரங்கி, இனிய உளநலந்தரூஉம் கனிமொழிகள் பல பேசியதோடு, தனது விற்பிடித்து விறற் போரடுங் கைகளினாற் பாகம் செய்யப்பெற்ற சுவை பொருந்திய நல்லுணவால், அருள்மேவிய ஆதரவோடு நம்மைப் பசிநோய்நீங்க உண்பித்து, தன் திருமேனியைப் பொலிவுசெய்து விளங்கும் உயரிய அணிகலனாய பொற் கடகத்தையும் ஒளியுறு முத்து வடத்தையும் யாம் வியப்புற்று

மகிழுமாறு, நமக்குப் பரிசிலாக ஈந்து, தனது ஊரும் நவிலாது, தன் பெயரும் கூறாது, நம்மினின்றும் சடுதியிற் பிரிந்துசென்ற, ஒப்புயர்வற்ற, ஒரு, பெருங்கொடைமேவிய பேரருள் வாணனை, யான் யாண்டும் கண்டவனல்லேன். இதுவன்றோ, தூய்மை மிக்க நல்வளம்பொருந்திய செந்தமிழ்புரக்கும் நந் தமிழகத்தின் மாண்புற்ற முதற் பெருங்கொடையாகும்.

**இளநங்கை :—** எந்தாய்! தாங்கள், இதுகாறும் கூறியன கொண்டு, எம் வள்ளற்பெருமான் கண்டீரக் கோப்பெருநள்ளி யின் கொடைச் சிறப்பினிலீடுபட்ட என் சிறிய உள்ளம் அப் பெருமான்மீது, ஏதேனும் ஓரிசைப்பாட்டு இசைக்க அவாவு கின்றது. தாங்கள் எனக்கருள்செய்யின், இன்னே, ஒருபண்ணை செவ்வழியிற் பாடி மகிழ்வேன்.

**வன்பரணர் :—** இளநங்காய்! நின் அன்பிற்கு மகிழ் கின்றேன். எம் நள்ளியின் மீது நீ யாத்த இன்னிசைப் பண்ணைப் பாடுக.

**இளநங்கை :—(பாடுதல்)**

பண்டும்பண்டும் நள்ளியின் மடவார் வரும்பாவலர்
கொண்டுவக்க அணியானை தந்து விடுமென்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரிக்
கெண்டைபாய சுனைநீலம் மொட்டலரும் கண்டீரமே

**வன்பரணர் :—** என்கண்ணே! மிகவும் நன்றாயிருக்கின்றது. இப்பண்ணை, நம் நள்ளி அண்ணலை யாம் நாளை நேரிற் காணும் போது, நின் உடன்பிறந்தானாய இளஞ்சேயுடன் அப்பெருமான் திருமுன் வணங்கி, இனிமையாகப் பாடி, அவனை மகிழ்விப்பா யாக. எம் தமிழ்த்தாயே! அமிழ்தினும் இனிய சுவை மிக்க மொழிவளம் பெற்ற அன்னாய்! இயற்கை மேவிய இயலொடு, இசையுங் கூத்துமிலங்க, ஐவகை நெறியுட்படர்ந்து, செய்வகை பலவுங்கொண்டு, செந்தமிழ் நானிலம் சீர்மலிந்தோங்கிச்செழிப் புற்றுயர வருள்செயும் செந்தமிழ்ச் செல்வியே! நீ! எம்கொடை வளங் காக்கும் கொற்றவனாம் நள்ளியை, என்றும் புகழ்வள மேவிய பூநிலமுதல்வனாய் ஓங்கச்செய்க; எம் சீர்மலிந்துயர்ந்த செந்தமிழ்ப் புரவலனை இப்பாரவர் போற்றிப் பணியுமாறருளுக; தண்ணளி சுரக்குந் தமிழவேளைத் தன்னிகரிலானாய்த் தழைக்க வுளங்கொள்க. இவை தாம், எம்போன்றாரால் எம்பெரு

மாற்குக் காட்டும் நன்றியறி நற்செயல்; புரியும் கைம்மாறு; கூறும் வாழ்த்தாம். ஓம்! நலம், தமிழ்த்தாய் வாழ்க! என்னருமைச் செல்வமக்காள்! யாம், ஈண்டு, நம் தலைவனின் நல்வாழ்வினை நெஞ்சுட்பதித்து, நம் தமிழ்ச்செல்வியை அவற்குப் பன்னலனு மருளுமாறு வணங்கியிறைஞ்சுவோமாக.

---

வாழிபல ஊழிதொறும் வாழிதமிழன்னாய்
மைந்தரொடும் தொண்டரொடும் வாழிதமிழன்னாய்
வாழி திருவார் காந்தைமேவு தமிழ்ச்சங்கம்
......... ......... ......... .........
வாழி தமிழ்த்தா யருளைத் தேடிய நல்லோரே.

---

காட்சி ௫ முடிவு.

---

இச் சிறு நாடகம் முற்றிற்று.

---

குறிப்பு:—இந்நூல்எழுதத்துணையாயது, திரு. Dr. உ. வே. சாமிநாதையர் அவர்கள்பதிப்பித்த 'புறநானூறு' ஆகும். இச்சிறு நாடகம், காந்தைத்தமிழ்ச்சங்கக் கல்லூரியினது கீழ்த்தர வகுப்புகள், புலவர் வகுப்பு ஆகிய இவற்றின் மாணவர்களால், இக்கல்லூரி ஆசிரியர்களாய திரு. பீம. இலக்குமணாச்சாரியவர்கள், திரு. கோ. இரத்தனம்பிள்ளையவர்கள் தந்த பயிற்சியினால், 3-10-1938-ல் நிகழ்ந்த, கல்லூரியின் இருபத்திரண்டாவதாண்டு விழாவினில், அண்ணாமலைப் பல்கலைக் கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர். திருவாளர். ச. க. கோவிந்தசாமிப்பிள்ளையவர்கள் M. A., தலைமையின் கீழும், 19-8-1939-ல் நிகழ்ந்த இருபத்தெட்டாவது சங்க ஆண்டுவிழாவினில், யாழ்ப்பாணம் பரமேசுவரக் கல்லூரி முதல்வர், திருவாளர். சு. நடேசபிள்ளையவர்கள். B.A., B.L., M.L.C., தலைமையின் கீழும் திறம்பெற நடிக்கப் பெற்றுப் புகழுரையாற் போற்றவும் பெற்றது.

# தமிழ் நாட்டின் திருமடங்களும், திரு. ஞானியார் திருமடமும்

திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்.

தமிழ் நாட்டின் பல இடங்களில் சிவனடியார் திருமடங்கள் பண்டு இருந்தமை பெரிய புராணத்தால் அறியப்படுகின்றது. திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் சேர்ந்து திருப்புகலூரை அடைந்தபொழுது அப்பதியில் அப்பொழுது இருந்தவராகிய முருகநாயனார் திருமடத்தில் எழுந்தருளியிருந்தனர் என்பதும், அங்ஙனமே அவர்கள் திருக்கடவூரை எய்தியபொழுது குங்கிலியக் கலயநாயனார் திருமடத்தில் அடியார் குழாங்களுடன் அமுதுண்டு தங்கியிருந்தார்கள் என்பதும், திருவீழிமிழலையில் இருவரும் வேறு வேறு மடத்தில் அடியார்களுடன் வதிந்து, இறைவன்பாற் படிக்காசுபெற்று அனைவர்க்கும் உணவளித்து வந்தனர் என்பதும், திருமறைக்காட்டில் மறைகள் பூசித்துத் திருக்காப்பிட்ட வாயிலைத் திருப்பதிகம்பாடித் திறந்துசென்று வழிபட்டு மீண்டபின் அப்பதியில் ஓர் திருமடத்தில் இரவுதங்கியிருந்தனர் என்பதும் அதிற் கூறப்பட்டுள்ளன. மற்றும் திருஞானசம்பந்தப் பெருமான் மதுரையை அடைந்தபொழுது அடியார் கூட்டத்துடன் தங்கியிருந்தஇடம் "செங்கமலத்திருமடம்" என்றுகூறப்பெற்றுளது. திருநாவுக்கரசர் திருப்பூந்துருத்தியில் தாமே திருமடம் சமைத்திருந்த வரலாற்றையும் அதனால் அறிகின்றோம். இவ்வாற்றால் திருத்தொண்டர்கள் தங்கியிருக்கும் திருமடங்கள் பல இடங்களில் சமய குரவர்கள் காலத்து இருந்தமை புலனாயினும், ஞான குரவர்கள் மாணாக்கர்களுக்குப் பரம்பரையாகப் போதித்தும் உபதேசித்தும்வரும் திருமடங்கள் அப்பொழுது இருந்தமை விளக்கமாக அறியக்கூடவில்லை.

திருமூலர் திருமந்திரத்தில் 'குருமடவரலாறு' என்னும் தலைப்பில் இரண்டு செய்யுட்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றில் 'மடம்ஏழு' என்று கூறப்பெற்றுளது. மற்றொன்றில் காலாங்கர், கோரக்கர், மாளிகைத்தேவர், நாதாந்தர், பரமானந்தர், போகதேவர், மூலர் என்னும் எழுவர் பெயர்கள் காணப்படுகின்றன.

அவர்களில் அறுவவரைப்பற்றி வேறு அறியக் கூடாவிடினும், மூலருடைய குருசந்தான மரபு ஒன்று இருந்திருக்கவேண்டு மென்பது "மூலன்மரபில்வரு மவுனகுரு" எனத் தாயுமான அடிகள் கூறுவதுபோல்பவற்றால் கருதத்தகும்.

கோதாவிரியாற்றின் பாங்கர் ஆமர்த்தகம், புட்பகிரி, கோளகி, இரணபத்திரம் என்னும் நான்கு மடங்கள் பண்டு சைவாசாரியர்கட்கு உரியனவாய் இருந்தன எனவும், பிரம சூத்திரத்திற்குச் சிவாத்துவித சைவபாடியம் இயற்றியவரும், சங்கராசாரியருக்கு முன்பிருந்தவரும் ஆகிய நீலகண்ட சிவாசாரியார் அம்மடங்களைச் சேர்ந்த சிவாசாரியர் வகுப்பைச் சேர்ந் தவர் எனவும் கூறுகின்றனர். அதன்பின் வேதாந்தமத குரவ ராகிய சங்கராசாரியர் பல இடங்களில் மடங்கள் நிறுவுவா ராயினர். பின்பு, இற்றைக்கு ஏறக்குறைய எழுநூறாண்டுகளின் முன்னர் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன மடமும், அதன்பின் தருமபுர ஆதீனமடமும், பின்னர் திருப் பனந்தாள் மடம் முதலாயினவும் தோன்றி நிலவுவவாயின. துவித, விசிட்டாத்துவித மடங்களும் தோன்றின. வீரசைவ மடங்களும் தமிழ் நாட்டிலும் அயல்நாட்டிலும் பல தோன்றி வளரலாயின. இவ்வாறு தோன்றிய மடங்களெல்லாம் ஞானத் திலும், தவவொழுக்கத்திலும் மேம்பட்ட பெரியோர்களால் நிறுவப்பெற்றனவாகும். ஒவ்வொரு மடத்திலும் அத்தகைய பெரியோர்கள் பலர் பின்னரும் இருந்து வந்திருக்கின்றனர். தமிழ் நாட்டில் சமயம் என்பது பெரும்பாலும் மடங்களின் ஆட்சியில் இருந்து வந்துளது. திருவாவடுதுறை ஆதீனமடமும், தருமபுர ஆதீனமடமும் சைவத்தையும் தமிழையும் புரப்பதில் தலை சிறந்துநின்றன. திருப்பனந்தாள் மடம் இப்பொழுது சில வழிகளில் தமிழுக்குஆக்கம் அளித்துவருகிறது.

இப்பொழுது தவஞானச் செல்வர்களாக விளங்கும் நம் உயர்திரு. ஞானியாரடிகளைத் தலைவர்களாகக் கொண்டுள்ள திருக்கோவலூர் ஆதீன மடமும் மெய்ஞ்ஞான நிலையுற்ற பெரியாரொருவரால் தோற்றுவிக்கப் பெற்றதாகும். திருக் கோவலூரை நினைக்கும் பொழுது அப்பதியின் சிறப்பையும், அதனைத்தன்னகத்துடையநாட்டின்பெருமையையும்கூற உள்ளம் விழைகின்றது. சோழநாட்டிற்கும் தொண்டைநாட்டிற்கும் நடுவணதாகி, நடுநாடு எனப்பெறும் அது திருமுனைப்பாடி நாடு, மலையமானாடு, சேதிநாடு, மகதநாடு என்னும் பலபெயர்களை

யுடையதாகும். இந்நாட்டிலே பெருவள்ளல்கள் சிலர் பண்டு இருந்திருக்கின்றனர். கடைஎழுவள்ளல்களில் ஒருவனாகிய மலையமான் திருமுடிக்காரியை ஈண்டுக் குறிப்பிடுதல் பொருந்தும். இவன் திருக்கோவலூரை அரசிருக்கையாகக்கொண்டு இந் நாட்டினை ஆண்டுவந்தவன். இவனது வரையாவள்ளன்மையை,

" நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்
பதனன்று புக்குத்திறனன்று மொழியினும்
வறிது பெயர்குந ரல்லர் நெறிகொளப்
பாடன் றிரங்கு மருவிப்
பீடுகெழு மலையற் பாடியோரே "

எனவும், பிறவாறும் நல்லிசைப் புலவராகிய கபிலர் பாராட்டியுள்ளார். தமிழ்நாட்டு முடியுடை வேந்தர்கள் ஓரொருகால் இவன் உதவியைப் பெற்று மாற்றாரை வென்றசெய்தியும் அறியப்படுகின்றது. இவ்வாற்றால் படையாண்மையிலும், கொடையாண்மையிலும் மேம்பட்ட காரியும், அவன் வழியினரும், ஆண்டது இந்நாடென்பது போதரும்.

பின்பு இந்நாட்டுத் திருக்கோவலூரிலே இருந்துஅரசாண்ட குறுநிலமன்னராகிய மெய்ப்பொருள் நாயனார்வரலாறு நெஞ்சை உருக்க வல்லது. வஞ்சவேடம் பூண்டுவந்த மாற்றானது சுரிகைக்கு இலக்காகி வீழும்பொழுதும் "மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் எனத்தொழுது", கொண்ட கொள்கையை நிலை நிறுத்தியவர். உயிர்நீங்கும் அக்கணத்திலும் "பரவிய திருநீற் றன்பு பாதுகாத்துய்ப்பீர்" என்று சுற்றத்தார்க்கும் பரிசனங் கட்கும் அறிவுறுத்தியவர். மற்றும் நரசிங்க முனையரையர் முதலிய திருத்தொண்டர்கள் பலர் இந்நாட்டில் விளங்கியிருந்தனர்.

" ஔவை பாடலுக்கு நறுநெய் பால் பெருகி அருந்
தமிழறிஞற் சிறந்து "

என்று போற்றப்பெறும் பெண்ணையாறும், "தென்றிசையிற் கங்கையெனும் திருக்கெடில" நதியும் இந்நாட்டை வளஞ் செய்வனவாகும். இந்நாட்டின் தலைநகராகிய திருக்கோவலூர் அட்டவீரட்டங்களில் ஒன்றாயதும், தேவாரப்பாடல் பெற்றதுமாகிய திருப்பதியாதலோடு ஆழ்வார்களின் மங்கலவாழ்த்துப் பெற்ற திவ்வியப்பதியும் ஆகும். முதலாழ்வார் மூவரும் 'மொழிவிளக்கேற்றி முகுந்தனைத் தொழுத' து இத்திருப்பதியில் நிகழ்ந்த வியப்புறு செய்தியாகும். மற்றும், "பவக்கடல்கடந்து

முத்தியங் கரையிற் படர்பவர் திசைப்பற நோக்கித், தவக்கலன் நடத்த வளர்ந்தெழும் சோணசைலம்" ஆகிய திருவண்ணாமலையைத் தன்னகத்துடையது இந்நாடன்றோ? மற்றும் இந்நாட்டின் பெருமைக்கு வேறு கூறுவானேன்? நாவுக்கரையரும், நம்பியாரூரரும் பிறந்தநாடு இந்நாடன்றோ?

" மறந்தரு தீநெறி மாற மணிகண்டர் வாய்மை நெறி
அறந்தரு நாவுக்கரசும் ஆலால சுந்தரரும்
பிறந்தருள உளதானல் நம்மளவோ பேருலகில்
சிறந்ததிரு முனைப்பாடித் திறம்பாடும் சீர்ப்பாடு "

என நம் அருண்மொழித் தேவர் கூறுவது ஈண்டு அறிந்து இன்புறற்பாலது. வில்லிபுத்தூரர் புதல்வராகிய வரந்தருவாரும் இந்நாட்டின் பெருமையைக் குறித்தற்கு,

" தேவரும் மறையும் இன்னமுங் காணச் செஞ்சடைக் கடவுளைப் பாடி
யாவரும் மதித்தோர் மூவரில் இருவர் பிறந்தநாடு இந்த நன்னடு "

என்று இயம்புவாராயினர். மற்று, நடுநாட்டுத் திருப்பதிகளில் திருப்பாதிரிப்புலியூர், என்னும் இப்பதியின் மேன்மை செப்புதற்கரிய தொன்றும். நாமெல்லாம் பிறவிக்கடலினின்றும் கரையேறுமாறு திருநாவுக்கரசர் ஐந்தெழுத்தின் துணைகொண்டு 'பொங்கு கடற் கன்மிதப்பிற் போந்தே'றிய பெருமை என்ஞான்றும் அடியார்களின் உள்ளத்தில் நிலை பெற்றிருப்ப தொன்றுகும். கரையேறியவுடன் அப்பர் தம்மைக் கரையேற்றிய முதல்வரைப்பாடிய அருமைத் திருவிருத்தம் சைவசித்தாந்த நுண்பொருளெல்லாம் அமைந்து பயனளிப்ப தொன்றுகும்.

" திருவாய் பொலியச் சிவாயநமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீ பாதிரிப் புலியூரரனே

என்பது சிவஞானபோதத்தின் உண்மையதிகாரம் கூறும் சாதனத்தையும் பயனையும் உணர்த்துகின்றது.

இத்தகுவிழுப்பமுடைய இப்பதியில்இத்திருமடத்தின்கண் திருக்கோவலூர் ஆதீன ஐந்தாவது பட்டத்து அருட்குரவராக எழுந்தருளியிருக்கும் உயர்திரு. ஞானியாரடிகளின் பெருமைக்குச் சென்னைமுதலிய பற்பல இடங்களினின்றும் போந்து இன்றுஇங்குநிறைந்திருக்கும் அடியார்குழுவே சான்று பகரும். அடிகளின் பெருமையைச் சுருக்கமாகக் குறிப்பிட வேண்டின், பரதனை நோக்கிக் குகன் கூறும் ஒருசெய்யுளைக் காட்டுதல் பொருந்தும்.

"என்புகழ் கின்ற தேஜைழ எயினனேன் இரவியென்பான்
தன்புகழ்க் கற்றை மற்றையொளிகளைத் தவிர்க்குமாபோல்
மன்புகழ் பெருமை நுங்கள் மாபினேர் புகழ்க ளெல்லாம்
உன்புக ழாக்கிக் கொண்டாய் உயர்குணத் தூவுத்தோளாய்"

அடிகளின் கல்விப்பெருமை அளவிடற்கரியது. வீரசைவப் பெரியார்களில் சிவப்பிரகாச அடிகள், சாந்தலிங்க அடிகள், சிதம்பர அடிகள் என்னும் மூவரும் ஒருருக்கொண்டாலனையர் நம் அடிகள். அடிகளின் சொற்பொழிவைத்தேன்மழை போலும் சொன் மழை என்றே கூறுதல்வேண்டும். அதனைச் செவிமடுப்பார் யாவரும் உள்ளேயிருக்கும் ஒரு தெய்விக ஆற்ற லால் இயல்பாக வெளிப்படுவன என்று நினைப்பரன்றி முயன்று பேசும் சொற்களாக நினையார் என்பது தேற்றம். அடிகள் சொற்பொழிவிற் காணும் எத்தனையோ வகையான வித்தகத் திறனையெல்லாம் எடுத்தியம்புதல் இப்பொழுதைக் கேலாதாக லின் இவ்வளவில் நிறுத்துவேன். சித்தாந்த சைவ வளர்ச்சிக்கு நம் அடிகள் செய்துள்ள உதவியோ அளவிடற்கரியது. சைவ சித்தாந்த மகாசமாசம் என்னும் சமய வளர்ச்சிப் பெருங்கழகம் அடிகள் திருமுன் இத்திருமடத்திலே தோன்றியது என்பதும், பல ஆண்டுகளில் அடிகள் அதற்குத் தலைமையேற்று நடத்தி வந்துள்ளார்கள் என்பதும், அடிகளின் சொற்பொழிவுகளாலே சைவத்தின் மாண்பும், சமயகுரவர்கள் பெருமையும் முத லாயின எங்கணும் விளக்கமுறலாயின என்பதும் சைவ மக்கள் யாவரும் நினைவு கூர்தற்பாலன. உலகில் எல்லா வகுப்பினரும், எல்லாச் சமயத்தினரும், ஆடவரும், மகளிரும், கற்றவரும் மற் றையரும் கேட்டுப் பாராட்டுவதும் பயனடைவதுமாகிய இயல்பு அடிகளின் சொற்பொழிவுக்கே அமைந்த தனிச் சிறப்பாகும். அடிகள் பட்டமேற்ற ஐம்பதாண்டுகளாகப் பொதுவாகத் தமி ழுக்கும், சிறப்பாகச் சைவத்திற்கும் எவ்வளவு பெருநலன் விளைந்திருக்கும் என்பதனை நினையின் இந்நாட்டினர் அவர்கட்கு எவ்வளவு கடமைப்பாடுடையர் என்பது தெளிவாம். அடிகள் பட்டமேற்ற பொன்விழாவைக் கொண்டாடிக் களிக்குமாறு கூடியுள்ள நாம் அனைவோரும் அடிகள் மற்றும் பல்லாண்டு வாழ்ந்து நம்மனோரைச் செம்மை நெறியில் உய்க்குமாறு வில் லாண்ட கனகத் திரள் மேருவிடங்கனை நினைந்து பல்லாண்டு கூறி வாழ்த்துவோமாக.

# *திருமுருகாற்றுப்படை

திரு. M. நடேசமுதலியார் அவர்கள்
தமிழ்விரிவுரையாளர், திருச்சிராப்பள்ளி.

இன்பம் என்பது உலக உயிர்கள் எல்லாவற்றிற்கும் உரிய வேட்கைப் பொருளாகும். அஃது அறிவினால்வளரும். அவ்வறிவு வளர்ச்சி நூலால்நுகரப்படும் தன்மையதாகும். நூல்கள் தாம் இம்மையின்பம் தருவனவும் மறுமையின்பம்தருவனவும் இருமையின்பமும் தருவனவும் என மூவகைய. அவற்றுள், இத்திருமுருகாற்றுப்படை இருமைக்கும் இன்பளிக்கும்பெருநூலாம். இதன் பெயர் திரு முருகு, ஆற்றுப்படை என முச்சொற்களாலாயது. இவற்றுள் ஆற்றுப்படை என்பது வழிப்படுத்தல் என்னும் பொருளுடையது. ஒரு கொடையாளியின்பால் தன் வறுமை தீர்த்துக் கொண்டான் ஒருவன் தான் பெற்றசெல்வத்தைத் தன் முன்னைய நிலையில் வறுமையடைந்தவராய் எதிர்வந்த இரவலர்களுக்கும் அறிவுறுத்தி அவரும் அவ்வள்ளல்பாற் சென்று தாம் பெற்றவற்றையெல்லாம் பெறுமாறு வழிப்படுத்தலே ஆற்றுப்படையாம். இன்பம் பெற்றானொருவன் ஏனையோரும் இன்பமுற வழிகூறும் இவ்வருள்நிலை போற்றத்தக்கது. தக்காரொருவனால் தன் அவலத்தைப் போக்கி இன்புற்ற ஒருவன் தன் பண்டைய நிலையில் நின்று அவலமுறும் ஏனையோரையும் அவன்பால் உய்த்து உதவிசெய்யும் இந்நன்முறை பண்டைத் தமிழ்ப்புலவரின் உள்ளக் கருணையினை நன்குவிளக்குவதாகும். இத்தகைய ஆற்றுப்படை நூல்களாகச் சங்கத் தொகை நூலாகிய பத்துப்பாட்டுள் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை என்னும் நூல்கள் காணப்படுகின்றன. அவற்றுள், திருமுருகாற்றுப்படை என்பது முருகப்பெருமானிடத்து அவன் அருளைப்பெற விரும்புவோரை ஆற்றுப்படுத்தும் பொருளுடையது. முருகாற்றுப்படை என்பதை முருகனிடத்து ஆற்றுப்படுத்துவது எனக் கொள்ளல்வேண்டும். பொருநராற்றுப்படை முதலியனவெல்

---

* இது, காந்தைத் தமிழ்ச்சங்கத்தில் நிகழ்த்தப்பெற்ற விரிவுரையின் சுருக்கமாகும்.

லாம் பெருநர் முதலியோர் ஏனையோரை ஆற்றுப்படுத்திய தாகப் பொருள் கொள்ளற்குரிய சொற்றொடர்களாம். ஆற்றுப் படையுள் ஒருவனை வழிப்படுத்துபவனும் அவனாற் செலுத்தப் பட்டுச் செல்லும் இரவலனும், அவ்விரவலர்க்கு வேண்டிய பொருள்தரும் தலைவனும் எனும் மூவரது நிலை கூறப்படும். ஆனால் இத்திருமுருகாற்றுப்படையுள் தலைவன் நிலையொன்றே கூறப்பட்டதன்றி அவனிடத்துச் செல்வோரும் அவரை உய்ப் போரும் ஆகியவர்களது நிலை கூறப்படவில்லை. ஏனைய ஆற்றுப் படைகளின் தலைவரும் இரவலரும் அவரை வழிப்படுத்துபவரும் ஆகிய இவர்கள் நூலெழுந்த காலத்தவரான்றிப் பிற்காலத்து நிலைத்தில்லாதவராவர். ஆனால் இத்திருமுருகாற்றுப்படையுள் இம்மூவரும் என்றும் நிலைத்துள்ளமை கண்கூடு. இதனால்தான் இந்நூல் பத்துப்பாட்டுள் முதன்மைபெற்றுத் திகழ்கின்றது. திருமுறையினும் இடம்பெற்றுப் பண்டுதொட்டுப் போற்றப் பட்டும் வருகிறது. இது நூலென்ற அளவில் பாராட்டிப் படிக்கப்படுவதோடல்லாமல் தெய்வமாகவும் போற்றப் பெறு கின்றது. திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழில் முருகனைப் பற்றித் தெய்வங்கள் காத்தல்வேண்டும் என்று கூறும் பகுதியில் இந்நூலும் காவற்றெய்வமாக நல்லிடம் பெற்றுள்ளது. பிற ஆற்றுப்படைகள் ஆற்றுப்படுத்தப்படுபவர்களது பெயரொடு சார்த்தி வழங்கப்படும். ஆனால் இது பாட்டுடைத் தலைவனைய முருகன் திருப்பெயரொடு சார்ந்து வழங்குகின்றது. பிறவற் றில் ஆற்றுப் படுத்தப்படுவானை விளித்தலும் அவன் நிலையை விரித்தலும் ஆற்றுப்படுத்துவான் தனது பழைய வறுமை நிலையும் பரிசில்பெற்ற பின் நிலையும் ஆகியவற்றைக் கூறும் பகுதிகள் இதன்கண் இடம்பெற்றில.

அகப்போர் புறப்போர் என்பன உயிரின் விடுதலைக்கென உலகில் நடத்தப் படுவன. உலக வாழ்வினைத் தனது கடமை என்ற அளவிற் கொண்டு அதனைப் பெரிதெனப்பற்றாது தன்னை உணர்ந்து குற்றம் நீக்குவதே உயிர்களின் தொழிலாதல் வேண்டும். உலக வாழ்வில் நம் குறை நமக்குப் புலனாகின்ற காலத்தெல்லாம் குறையொன்று மில்லாத நிறையுடைய பரம் பொருளை நாம் நாடுகின்றோம். நாடிப் பற்றிய காலத்து அந் நிறையுடைய பொருளால் தரப்படும் திருவருட் செல்வம் நம் உள்ளத்தே நிறைகின்றது. இத்தகைய திருவருட் செல்வத்தைக் கொடுப்பவன் முருகன் ஆதலால், 'திரு' என்னும் அடைமொழி இந்நூலின் முதலாகத் திகழ்கின்றது. முருகன் என்ற சொல்

இளமை,மணம், தெய்வத்தன்மைஎன்னும் முப்பொருளைத்தருவ தாம். இம்முப்பொருளும் பொருந்திய நிலையிலேயே இப்பெயர் முருகப்பெருமானுக்கு வழங்குகின்றது. அழியா இயல்பும் மாசின்மையும் பேராற்றலும் உடையான் முருகன் என்பதனைப் "பண்டைத்தன் மணங்கமழ் தெய்வத்து இளநலங்காட்டி" என்ற அடிகளால் இந்நூலுள் விளக்கினர் நக்கீரனர். இம் மூன்று நிலையும் உடையான் தன்னளவில் உயிர்கட்கு அப்பாற் பட்டு நிற்பின் அவனால் உலகுக்கு யாதொரு பயனும் இன்றாம். ஆனால் முருகனே உயிர்கட்கு அப்பாற்பட்டு மறையாது தன்னை அடுத்தவர்க்கு அருள் சுரக்கும் பெற்றியன் என்பதனை "எய்யா நல்லிசைச் செவ்வேற் சேய்" என்ற அடியால் இந்நூல் நன்கு விளக்குகிறது. எக்காலத்தும் போர்செய்து உதவுதலால் செவ் வேல் என விளக்கங் கூறினர் நச்சினர்க்கினியர். யாவராலும் விரும்பப்படுகிற தன்மை கருதித் திருமுருகு என்றார் ஆசிரியர். ஆன்ம விளக்கத்தின் தடையாகிய பகை நீக்க வல்லது அவன் கைவேல் ஆகும் என்பர் அறிஞர். கண்டவர் விள்ளார் என்ப தனால் முருகன் திருவருளைப் பெற்றோர் அடையும் பின்நிலையினை நக்கீரனர் கூறிற்றிலர். ஏனைய புலவர் உலகச் சுவைபற்றிக் கூறுவர். இந்நூலாசிரியர் "இன்னே பெறுதி நீ முன்னிய வினையே" என முருகனருள்பெற விழைந்த உயிரைத் தூண்டிய தோடு "அஞ்சல் ஓம்புமதி அறிவன் நின்வரவு" என முருகன் உயிர்க்கு அருள் செய்யும் நிலைமையையும் எடுத்துரைத்தார். 'அறிவன் நின் வரவு' என்ற சொல் முருகனது முற்றறிவுடை மையையும் "உலகத்து ஒரு நீயாகத் தோன்ற அருள்செய்வன்" என்பதனால் உயிர்கள் பெறும் நல் வாழ்க்கையையும் விளக்கி யுள்ளார். முருகன் தன் படையொடு அடியார்க்கு அருள்சுரக் கத் தங்கிய பரங்குன்றம் முதலிய ஆறு பாசறைகளின் இயல் பையும் இந்நூலிற்பகுத்து விளக்கியுள்ளார்.

முதற்கண், திருப்பரங் குன்றத்து முருகன் அமர்ந்த நிலையை அறியாதாரும் அறிய விளக்குகின்றவர், காணப்படும் ஞாயிறுகாட்டிக் காணப்படாத முருகனது ஒளியுருவினைத் தெளி வித்தார். "ஞாயிறு கடற் கண்டாங்கு" என்பது நிறனும் தொழிலும் பற்றிய உவமை. இதன்கண், ஞாயிறு இருளைக் கெடுக்குமாறுபோல, தன்னை மனத்தால் நோக்குவார்க்கு மாயை யைக்கெடுத்தலால் தொழிலுவமும், தன்னைக்கட்புலனால் நோக்கு வார்க்குக் கடலிற் பசுமையும் ஞாயிற்றின் செம்மையும்போல மயிலிற் பசுமையும் திருமேனியிற் செம்மையும் தோன்றலால்

நிறவுவமமும் கொள்ளக் கிடந்தமை காணலாம். முருகன் திருவடி அஞ்ஞானத்தை ஒழித்தலால் 'மதன்உடை நோன்றாள்' எனப் போற்றப்படுகின்றது. இத்தொடர்க்கு அறியாமையை உடைத்தற்குக் காரணமாய் வலிமையுடைய தாள் என்பது பொருளாம்.

நக்கீரனார், இயற்கைப் பொருள்களைப் படிப்போர் உள்ளத்துப் பதிய உரைக்கும் திறனுடையார். அவர், திருப்பரங்குன்றத்து மலைச்சாரற் பொழிலின் ஓவியத்தினை "மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கம்" என்ற தொடரால் தீட்டிக் காட்டுகின்றார். மந்தி என்பதற்கு ஞாயிறு எனப்பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர். "உலறிய கதுப்பிற் பிறழ்பற் பேழ்வாய்ப்" பேய்மகளின் உருவம் இந்நூலிற் சித்தரிக்கப் பட்டுள்ளது. இந்நூல் அக்காலத்து ஆண்ட பேரரசர்களின் வெற்றி முதலியவற்றையும் சுட்டிச் செல்லுதலால் வரலாற்று நூலெனவும் கொள்ளப்படும். பாண்டியனது அரண்மனை வாயிலைச் சிறப்பிக்கப் போந்த நக்கீரனார் அவன் வாயிலில் போரை வென்று விரும்பிக் கட்டிய வெற்றிக்கொடியுடனே பகைவரை மகளிராக்கி அவர் கொண்டு விளையாடுதற் கேற்பத் தூக்கிக் கட்டியுள்ள பந்தும் பாவையும் அறுப்பாரின்மையின் தொங்குகின்ற இயல்பினைச் "செருப்புகன் றெடுத்தசேணுயர் நெடுங்கொடி,வரிப்புனை பந்தொடுபாவை தூங்கப், பொருநர்த் தேய்த்த போரறுவாயில்" என்ற அடிகளாற் கூறினார். "திருவீற்றிருந்த தீதுதீர் நியமம்" என்றதனால் கடைவீதியின் சிறப்பினைப் புலப்படுத்துவர். அடுத்தபடியாக முருகன் பிணிமுகம் என்ற யானையை ஊர்ந்து எழுந்தருளிவந்து செந்தில் முதலிய பாசறைகளில் தங்கி அருள்சுரக்கும் காலத்து அவனது தோற்றப் பொலிவு, அருட்செயல்முதலியன கூறப்படுகின்றன. திங்களைப் போல் அறிவொளி பரப்பும் முகத்திற்கேற்ப அவன் கைகளில் ஒன்று "சின் முத்திரையில் மார்பொடு விளங்கும்" என்பர். "ஊமைத் தசும்புள் நீர்நிறைத் தாங்கு" உயிர்கள் உள்ளத்து அறிவொளி பரப்புவான் முருகன் என்பதனையே இக்குறி குறிக்குமென்பர் உரைகாரர். ஆவினன்குடியில் முருகன் எழுந்தருளி யிருந்த காலத்து அவனது சீற்றமுடைமை பற்றி முத்தொழில் தடைப்பட்டதெனவும் அந்நிலையில் அவனைக் குறையிரக்கச் செல்லும் தேவர், முனிவர் முன்செல்ல, தாம் அவர் பின்சென்றனர் எனவும் கூறுவர் இவ்விடத்துத் தமிழ் நாட்டு முனிவர்களது நல்லியல்புவிளக்கப்படுகிறது. இத்தகைய

முனிவர்களைக் கண்ட அளவிலேயே முருகன் சினமாறவேண்டி அவரைத்தேவர் முன் அனுப்பினர் என்பது புலனும். திருமாலின் கருடனைப் பற்றிப் பேசவந்த ஆசிரியர் "கடுவோ டொடுங்கிய தூம்புடை வாலெயிற் றழலென வுயிர்க்கும்........ பாம்பினை"ப் பிடித்துள்ளது அக்கலுழன் என்பர். இவ்விடத்து விடம் பொருந்திய துளையினையுடைய பற்களைப்பெற்றபாம்பினை அதன் இயல்புணர்ந்து விளக்கிய முறை போற்றத் தக்கது. "அறுநான்கிரட்டிய இளமைநல் யாண்டளவும்" பண்டைத்தமிழ் மக்கள் கல்வியிற் காலங்கழித்தனர். இத்தகையோர் திருவேரகத்துள் முருகன் மந்திரத்தை ஓதிச் செல்லும் முறை இந்நூலுள் கூறப்பட்டது. தமிழ் நாட்டில் உளம்பட உரைப்போரைக் காக்கும் மந்திரங்கள் பண்டு தொட்டே பயின்று வந்தன. முருகனது "ஆறெழுத்தடக்கிய அருமறைக் கேள்வியினை" அவனடியார் பலர் "நாவியன் மருங்கில் நவிலப்பாடிப்" போற்றினமை இந்நூலுள் நன்கு உணர்த்தப் பட்டுள்ளது. உண்மையாக முருகனைக் காண விழைந்தோர் அவனை எவ்விடத்தும் காணலாம் என்றும் அன்பின் வழிப்பட்டு அவனைக் கண்டுணர்ந்தவர் அவனை அடைந்து "நின்னளந் தறிதல் மன்னுயிர்க்கருமையின், நின்னடியுள்ளி வந்தனன்" என அவன் திருவடிப்பரிசில் ஒன்றையே வேண்டிப் பெறுதல் வேண்டுமெனவும் முடிவாக நக்கீரனார் என்னும் புலவர் நம்மனோர்க்கு அறிவுறுத்தி அருள்கின்றார்.

உ

# தமிழ்ச்செய்திகள்

**நாகைத் தமிழ்ச்சங்கம் :**—10-2-40 தேதியன்று இச்சங்கத்தின் மூன்றாவது ஆண்டுவிழா, திருவாளர், **Sir. A. T. பன்னீர்ச்செல்வம்** (KT. Bar-at-Law. M. L. A.) அவர்களின் சீரிய தலைமையில் நடைபெற்றது. நாகூரிலிருந்து வந்த 'Muslim League'ன் தொண்டர்படைஅணிவகுத்து, தமிழ்முழக்கம்புரிந்து இன்னிசையால் மகிழ்வித்த தமிழ்ப்பணி தமிழ்நாடு நன்றியுடன் போற்றும் தரத்தது. நாகைச் சங்கத்தார் அரிதிற்றிரட்டிய ரூபா ஐம்பது கொண்ட பொற்கிழியைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் திக்கற்றோர் இல்லத்திற்கு உளமுவந்து உதவியது எங்கணும் காணப்படாத அரியதொரு அறச்செயல்.

**கரந்தைத் தமிழ்ச்சங்கம் :**— இச்சங்கத்தின் பேரன்பரும் ஆயுள் உறுப்பினருமாகிய திருவாளர், **Sir. A. T. பன்னீர்ச்செல்வம்** அவர்கள் 17-2-40 தேதியன்று எமது அழைப்பிற்கு எளிவந்து தோற்றமளித்தனர். ஆங்கிலமன்னரின் இந்திய அமைச்சருக்கு ஆய்வுரை தருபவராக மன்னர்பிரானால் செல்வமவர்கள் அழைக்கப்பெற்றது தமிழ்மக்கள் மதிக்கத்தகும் நற்செய்தியாகும். இதனைப் போற்றி மகிழச் சங்கத்தார் தமிழ்ப்பெருமன்றத்தில் குழுமியிருந்து, சங்கத்தின் சார்பிலும், சங்கப்புலவர் கல்லூரியின் சார்பிலும் திருவாளர் அவர்கட்கு வாழ்த்தெடுத்து மகிழ்ந்தனர். வாழ்த்துரைகள் வருமாறு:—

## கரந்தைத் தமிழ்ச்சங்கத்தார் கூறிய
## வாழ்த்துப்பாமாலை

**சுடர்ஞாயிற் றொளியுறுபார்ச் சூழலெலாம் தனதொளியும் சூழ ஆளும்**
**நெடுமுடியன், அவன் பிரதிநிதி, தேயம் ஆள்வார்கள் நீண்மதிப்பும்,**
**குடியரசின் ஒருபடியாங் குழுவினர்தம் முண்மதிப்பும் கொண்டு நிற்கும்**
**படிபுகழ் ராவ் பகதூர்சர் பன்னீர்ச்செல் வப்பெயர்கொள் பண்பன் வாழி!**

திறமையினைப், பெருந்தன்மைச் சிறப்பதனைப் பொதுநலத்திற் றிகழும்
[பற்றை
உறுநடுநன் னிலைமையினை உணர்குடிகள், உறுப்பினரை ஒருங்கு தேர
வருவழி,யவ் வுறுப்பினர்கள், வாய்ப்புணர்ந்து தலைவர்தனை வரித்தலாலே
ஒருமுறையோ பன்முறைகள் உயர்நாட்டாண் மைத்தலைமையுற்றாய்!வாழி!

அருந்தமிழர் பொருள்கொண்டோர் அரசன், உடல்உயிரறமா ஐயாற்றுங்கு
மருந்துகலை யாமறங்கள் வழங்கச்செய் பொதுவறத்தின் மாண்போ ராதார்
பொருந்துறுதாய் மொழிக்கலைக்குப்புகுதியிலா தொழித்திட்டபுன்மைநோக்
திருந்துநெறி யுறத்தமிழும் சேர்த்திட்ட நின்னீதி செப்பற்பாற்றோ! [கித்

தண்டமிழ்த்தாய் பிற்காலத் தளர்வகன்று பண்டைநிலை தாங்கற் கேற்ற
தொண்டியற்றும் இச்சங்கத் தொண்டற்கடம் உளமகலாத் துணைவணுகிக்
கொண்டுளநற் பொருள்கல்வி கூட்டுறவு பதவியெனக் கூறி வற்றால்
எண்டகு நற் பலஉதவி இயற்றிடுநின் பெருந்தொண்டை இயம்ப லாமோ ?

ஒன்றுமொரு கொள்கையினை உளங்கொண்டோர், தம்முரிமை உறவே
[பெற்று
நன்றுறினும், அன்றுறினும் நடுக்கின்றி மிடுக்கின்றி, நாளும் போற்றித்
துன்றுமொரு நிலையோரே தூய்மையுறு பெரியோர்கள்; சொற்ற மேன்மை
ஒன்றுமக லாநின்னை எம்பெரியான் எனல் முகமன் யியம்ப லாமோ ?

நட்புடனோர் திட்டமுற நாட்டினரும் ஆட்சியரும் நாடிச் சூழ்ந்த
வட்டமுறு மாநாட்டில் மன்னவையோர் எவ்வெவரும் மதிக்க நின்றே
திட்பமுறு நுண்ணுரைகள் செலச்சொல்லிப் பயன்கொண்ட செம்மால் !
[நின்சீர்
எட்டுளவத் திசையெல்லாம் இனிதறிந்த தியாமிங்ஙன் இயம்ப லென்னே!

சென்னைநாட் டாட்சியினைச் செய்பெருமான் அகத்துறுப்பாய்ச் சிவணி
[நின்றும்,
மன்னியதோர் சட்டசபை வயங்குமமைச் சினர்வகையில் மன்னி நின்றும்,
அன்னவர்தம் எதிர்நிலையார் அவைமேவிக் குறைவருங்கால் அகற்றி நின்றும்
இன்னவகை எவற்றினும்நின் இருந்திறலைக் கண்டுவியப் பெய்தார் யாரே !

முந்தியபல் பதவியினும் மூதறிவு தான்தோன்ற முற்றுஞ் சூழ்ந்தே
எந்தவிடை யூற்றினையும் எளி தோட்டி எவர்க்குமகிழ் வியற்று விக்கும்
தந்திரஞ்சேர் நின்றிறமை தனைக்கண்ட ஆங்கிலமன் தருமிக் காலம்
இந்தியநாட் டமைச்சரவர் இருந்துணையாய் நினைக்கொண்ட ஏற்றம் நன்றே!

ஆங்கிலத்தின் பெரும்புலமை, அருஞ்சட்டக் கலையுணர்வு, அழகுதோன்றத்
தேங்குசுவைச் சொல்வன்மை, செப்பியபல் பதவிகளிற் சிறக்குஞ் செம்மை
பாங்குறக்கொள் உளத்தூய்மை பலவின்ன நற்குணங்கள் படைத்த வற்றுள்
ஓங்கிமிளிர் வதுநின்னுள் உறைகடவுட் பற்றுரும் ஒன்றே யம்மா!

வாழியபல் லூழியெலாம் வளர்மதிப்பன் னீர்ச்செல்வ மாண்பன் வாழி
வாழியிவன் குலம்மைந்தர் வழிவழியே பல்வளனும் வாய்ந்து வாழி
வாழிதிரு வருளால்நம் மாகாணத் தலைவனென வருவோன் வாழி
வாழிய வித்தமிழ்நாடு மனனுறக்கொள் வாழ்வெல்லாம் மன்னி வாழி!

## கரந்தைத் தமிழ்ச்சங்கப் புலவர் கல்லூரி
### ஆசிரியர்களும், மாணவர்களும் அளித்த
## வாழ்த்தியல் நல்லுரை

உலகமெலாம் புகழ்கரந்தை யுயர்சங்கப் பேரன்ப! உவப்பக் கேள்,நீ!
உலகமெலாம் புகழ்ந்தேத்து முயர்நிலையை யடைந்தனையா முவகை
[கொண்டேம்
உலகமெலா மிறும்பூது கொளவெங்கள் சங்கத்திற் குயர்வை நல்க
உலகமெலா முளமகிழ வருகநலந் தருகவள முவந்து வாழி!

தமிழ்நாடு பிறர்க்கடிமை யுற்றிருக்கும் நிலைமையினைத் தகவி னுய்ந்தே
தமிழ்நாடு தமிழருக்கே யெனுமுழக்கந் தமிழகத்திற் றழையச் செய்தாய்!
தமிழ்நாடு தன்னுரிமை யுடனிமிர்ந்து நடக்கவெனத் தறுகண் பூண்டே
தமிழ்நாடின் றெழுச்சிகொளத் தட்டியெழுப் பியதலைவ! தழைத்துவாழி!

தமிழ்தழைக்க வெனவுன்னித் தகவிலா ரெதிர்ப்பையெலாந் தடிந்துநின்றே
தமிழர்களின் றமிழ்ப்பயில ஐயாற்றிற் றகவுடனீ தக்க செய்தாய்!
தமிழ்நாட்டில் நின்செயலால் தமிழறிஞர் பலரானர் தறுக ணாள!
தமிழ்நாட்டில் நின்படிமச் சிலைநாட்டி வாழ்த்திடுவேம் தமிழர் வாழ்வே!

தன்னையே மதித்தொழுகுந் தகுதியிலாத் தலைவருக்கே தகவொன் றின்றிச்
சென்னைமா மண்டிலத்தின் மன்றமதிற் கைதூக்குஞ் சிறுமை பூண்டோர்
நின்னையே அரியேறாய் நினைந்தழிந்தார் நீயுறழ்வின் நிறுத்த சொற்கே
என்னையே விடையிறுப்போ மெனவேங்கித் திணறினர்கா ணெங்கள்
[கோவே!

தமிழ்மொழியின் தனிமாண்பைக் குலைக்கவெனச் செயல்புரிந்த சழக்கர் [நாணத்
தமிழர்களை அணிவகுத்து நிறுவியரும் போர்தொடுத்த தமிழர் வீர!
தமிழழிக்க வெண்ணியவர் வெங்கிட்டுப் போயுழலத் தமிழ! நீதான்
தமிழரறி வொளிநல்க விலண்டன்மா நகர்சேருந் தகுதி நன்றே!

காட்சிதர வுடன்படார் தலைவருக்குத் தலைமையிடங் கண்டு நன்றே
மாட்சிமிக நினக்களித்த மன்னர்பிரா னாசியலின் மாட்சி வாழ்க!
நீட்சியுற வாட்சிசெய நினைந்துழன்றோர் போயொழிந்தார் நீடு நின்றே
ஆட்சிபுரிந் தருந்தமிழ்க்கே யாக்கமளித் தளவிலவாண் டமைந்து வாழி!

தமிழர்களின் பெருந்தலைவ! இந்தியா வமைச்சருக்கே தக்க கூறித்
தமிழர்களின் மொழிநாடு தனித்திலங்க வடிகோலித் தக்கோய் மீண்டுந்
தமிழகமே வரும்போது தனித்தமிழ்மண் டிலத்தலைமை தாங்கி யென்றுந்
தமிழரெலாம் வாழ்த்தொலிக்கத் தரியலர்க ளுளநாணத் தழைத்து வாழி!

பதவியெனிற் பத்தினையுந் துறந்தந்தப் பதவிபெறும் பதர்க ளெல்லாம்
பதவிநிலை யறியாத பல்லாண்டின் முன்பலவாம் பதவி யுள்ளும்
பதவிமிக மேன்மைபெறப் பன்னீர்ச்செல் வம்போன்றார் பாரில் யாரே
பதவிகளைத் திறமையுற நடத்துவரிங் கெனப்புகழும் பண்பை ஏற்றோய்!

தமிழ்ப்புலவர் புரவலனார் தமிழவேள் தமிழ்வளர்க்கத் தகவி னுய்ந்தே
தமிழ்ப்புலவர் கல்லூரி தமிழ்க்கரந்தை தனிநாட்டத் தகைமை யாயத்
தமிழ்ப்புலவர் கல்லூரி பொருட்குறையே யின்றிநலத் தமிழர் நாட்டில்
தமிழ்வளர்பல் கலைக்கழக மெனப்புரிந்து வாழியநீ தகுதியாள!

வாழியபன் னீர்ச்செல்வ! வண்டமிழே போன்றோளிர்ந்து வாழ்வு [பெற்றே!
வாழியவெம் வளர்சங்க வாழ்நாளின் உறுப்பினனீ வாழ்வு கொண்டே!
வாழியநற் றமிழ்நாடு தனித்திலங்கிப் பிறர்வணங்கும் வண்மை யுற்றே!
வாழியவெம் வளர்கரந்தைத் தமிழ்ச்சங்க மென்றென்றும் வாழ்க மாதோ!

**இந்தி மொழிபற்றி அரசியலார் செய்திருக்கும் விதிகள் :—**

21—2—1940 ஆம் நாள் அரசியலார் கல்விப் பிரிவில் வெளியிட்டிருக்கும் அறிக்கையின் சுருக்கம் :—

I-முதல் III-வது 'Form' வரையுள்ள வகுப்புகளில் இந்தி மொழிப் பயிற்சியைக் கட்டாயப் படுத்தியது பெருத்த மனக் கொதிப்பையும் எதிர்ப்பையும் மக்களிடையேவிளைத்தது. இந்தி மொழி, தேர்வுக்குரிய பாடமல்லாதபடியால் இப் படிப்பு பயனற்றதொன்றாய் முடிந்தது.

இனி இந்திமொழியை I-முதல் III-வது 'Form' முடியவும் IV-முதல் VI-வது 'Form' முடியவும் விருப்பபாடமாய் வைத்து தேர்வுக்குரிய பாடமாய்ச் செய்வது நன்மையை விளக்கும், என அரசியலார் கருதுகின்றனர். சென்னை மாநிலத்திலுள்ள மக்கள் இந்தி வழங்கும் வடநாட்டுடன் பயிற்சிகொள்ள இந்திமொழி துணைசெய்யுமென அரசியலார் நினைத்து விதியை இவ்வாறு திருத்தி அமைக்கின்றனர்.

இந்தி பயிலும் மாணவர்கள் இந்தி வகுப்பில் பயில வேண்டுமென வலியுறுத்த வேண்டுவதில்லை யென்று விரைவில் உத்தரவு பிறக்கும்.

இந்திவகுப்புகளின் மாணவர் எண்ணிக்கை போதிய அளவு மிகுதியாக இருந்தால், I-முதல் III-வது 'Form' வரை விருப்ப பாடமாக இந்திபயிலும் கலாசாலைகளிலுள்ள இந்தி ஆசிரியர் களின் 'அரசியல் நன்கொடை' நிறுத்தப்பெறாது. IV-முதல் VI-வது 'Form' முடியவுள்ள இந்தி ஆசிரியர்கட்குப் பாதியின் மேலும் 'அரசியல் நன்கொடை' கொடுக்கப் பெறும்.

இவை, இந்திமொழிப் படிப்பு பற்றி அரசியலார் செய் திருக்கும் விதிகள்.

இந்திமொழியை விருப்பபாடமாகச் செய்தவரையில் நல்ல முடிபுதான். இந்திமொழிப் பயிற்சி வடநாட்டினருடன் தென்னிந்தியர் தொடர்பு கொள்ளுதற்கு வாய்ப்புள்ளது எனக் கூறும் காரணம் வெற்றுரை ஆகும். வங்காளி, குசராத்தி, மராத்தி ஆதிய நூற்றுக் கணக்கான மொழிகட்கும் இக் காரணம் செல்லுமன்றே! அவற்றையெல்லாம் விடுத்து, இந்தி ஒன்றன்மாட்டுச் சலுகை காட்டுவதன் நேர்மை யாது? இந்தி ஆசிரியர்கட்கு மிகுதியான "அரசியல் நன்கொடை" கொடுக்கப்

படும் என்ற முடிபில் யாது நேர்மை இருக்கின்றது? இதனினும் சிறந்த பாடங்களின் இன்றியமையாமையைக் கருதாது இந்தி மொழிக்காக மிகுந்த தொகையைச் செலவிடுவது விழலுக் கிறைக்கும் நீரல்லவா? பணமில்லையெனக் கூறித் தொடக்கக் கல்லூரிகளை மூடுவதும் இந்தி மொழி யாசிரியர் பொருட்டுப் பணத்தை வழங்குவதும் நாட்டின் நலங்கருதியா? தமிழ் மொழி முதலியநாட்டுமொழிகளை I-முதல் VI-வது 'Form'முடியக்கட்டாய பாடமாக வைத்துத் தாய்மொழியில் ஊற்ற முள்ளவர்களாக மாணவர்களை நெறிப்படுத்துதல் முதன்மையென அரசியலார் கருதி முடிப்பார்களாக.

---

**திருப்பனந்தாள்ஆதீனத்தின் தமிழறம்:**—இம்மடத்தின் தலைவ ராகிய திருவாளர். காசிவாசி சுவாமிநாதத்தம்பிரான் சுவாமி யவர்கள் தமக்குரியதாய் காவலூர் மேலசேத்தி என்ற ஊர்களில் உள்ள 114-3 ஏக்கர் நன்செய் நிலங்களையும் 4-72ஏக்கர் புன்செய் நிலங்களையும் அண்ணுமலைப் பல்கலைக்கழகத்துக்கு அறவுறுதிச் சீட்டு (Trust deed) மூலம் கொடுத்திருக்கின்றனர். இந்த நிலங் களின் பொறுமதி ரூபா 75,000 எனவும், ஆண்டின் வருவாய் ரூபா 1750 எனவும் மதிக்கப் பெறுகின்றது. இதன் வருவாயி லிருந்து தேவாரத் திருப்பாடற்பரிசு ரூபா 500-ம், எஞ்சிய தொகையைத் தமிழ் இலக்கிய இலக்கண வெளியீடுகட்கும் பல் கலைக்கழகத்தினர் பயன்படுத்தி வரவேண்டுமென்பது கருத்து. இந்நல்லறத்தை கழகத்தின் ஆட்சிக் குழுவினர் ஏற்றுக்கொண்ட நற்செய்தி 21-2-1940-ல் வெளிவந்த கழக அறிக்கையில் குறிப் பிடப்பெற்றுளது.

தேவாரப் பரிசின் விதிமுறைகள் யாவையெனத் தெரியு மாறில்லை. தேவாரத் திருப்பாடல்கட்குப் பல்கலைக் கழகத்தின் இசைப் பிரிவில் (Music Department) நல்லிடம் தாராது புறக் கணித்துவந்த கழகத்தின் ஆட்சிக்குழுவினர், இந்நல்லறத்தைப் பேணுவரோ என்ற ஐயம் தமிழ்மக்களின் உள்ளத்தில் நிலை பெற்றிருக்கின்றது.

தம்பிரான் சுவாமிகள் உளமாரச்செய்த இச்சீரிய நல் லறங்கள் இறைவனருளால் சீர்குலையாது காக்கப்பெறுமென வேண்டுகின்றோம்.

---

## புத்தக மதிப்புரை

**எலிசபேத் பிரை பெருமாட்டி** :—திரு. தி. நீலாம்பிகை அம்மையார் இயற்றிய வரலாற்று நூல். மக்கட்பணியே வாழ்க்கைப்பயனாகக் கருதிஉழைத்த மேனாட்டுப்பெண்மணியின் உண்மைச்சரிதம். நல்லாரைப்பற்றிப் படிக்க, கேட்க, சிந்திக்க, அன்னாரின் குறிக்கோளை உளங்கொண்டு போற்ற, மக்கள் தூண்டப்படுதலே நல்வாழ்வு பெறுதற்குரிய அறநெறி. இவ்வரிய நூலைச்செவ்வியநடையில்இயற்றி உதவிய ஆசிரியரின் நன்றி போற்றற்பாலது. இதன் விலை அணா 10. தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தில் விலைக்குக்கிடைப்பது.

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்.